
# தமிழரசு

16.7.1994 ரூ.3







பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து

# காதிகிராப்ட்

அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

## இந்த இதழில்...

69 சதவிகித இட ஒதுக்கீடு:
மாண்புமிகு முதல்வர்
விளக்க அறிக்கை: . . . . . . . . . . . . . 2

69 சதவிகித இட ஒதுக்கீட்டுச்
சட்டத்திற்கு மேதகு குடியரசுத்
தலைவர் அங்கீகாரம்:
மாண்புமிகு முதல்வர் அறிக்கை. . . . . 8

முழுமையான நிரந்தரத் தீர்வே
நமது ஒரே குறிக்கோள்!
- குமரி மாவட்ட அரசு விழாவில்
மாண்புமிகு முதல்வர் உரை. . . . . . . . . 10

தமிழ் மக்கள் அனைவருக்கும்
பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே
நமது தலையாய கடமை!
- சேலம் மாவட்ட அரசு விழாவில்
மாண்புமிகு முதல்வர் உரை. . . . . . . . . 18

பர்கூர் தொகுதி மக்களுக்கு
மாண்புமிகு முதல்வர் உதவி. . . . . . . . 29

நூல நயம் . . . . . . . . . . . . . . . . . 31

# தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2025

ஆடித் திங்கள்: 32

மலர்: 25 இதழ்: 2

16.7.1994

விலை ரூபாய் மூன்று



### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.** *(4)*

■ விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போது எவ்விடத்திலும் துன்பம் இல்லை

# "சமூக நீதி காத்த வீராங்கனை" புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அரசு 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்திட எடுத்த நடவடிக்கை குறித்த விளக்க

## அறிக்கை



**தா**ழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமுதாய மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதே உணர்வுடன் தமிழ்நாட்டில் அந்த மக்களுக்குச் சமூக நீதி கிடைத்திடும் வண்ணம் 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து செயல் படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, சட்டபூர்வமான அனைத்து நடவடிக்கை களையும் தொடர்ந்து எடுத்துவருகின்றது.

தமிழக அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வந்திருந்தாலும், குறுகிய அரசியல் லாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, தமிழக அரசு எடுத்து வந்த நடவடிக்கைகளை இருட்டடிப்பு செய்து சில தவறான செய்திகளைத் தமிழக மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றார்கள்.

எப்போது உச்சநீதிமன்றத்தில் 50 சதவீதத் திற்கு மேல் இட ஒதுக்கீடு வழங்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதோ, அப்போதே இந்தப் பிரச்சினை தமிழகத்தின் தலையாயப் பிரச்சினையாக – உயிர்நாடிப் பிரச்சினையாக ஏற்றுக்கொண்டு நாங்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த இட ஒதுக்கீட்டு முறை எப்படியேனும் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று, 7.1.1993 அன்று முடிவு செய்தோம். அந்த முடிவின்படி 22.3.1993 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு மறு ஆய்வு மனுவும் – Review Petition பின்னர் ஒரு தெளிவாக்க மனுவும் – Clarification Petition தாக்கல் செய்தோம். சட்டரீதியாக நாம் மேற்கொண்ட முயற்சிகள் பயன் தராமல், 7.5.1993 அன்று மறு ஆய்வு மனுவும், தெளிவாக்க மனுவும் உச்சநீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டன. மீண்டும் 28.9.1993 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு Special Leave Petition போட்டோம். 7.10.1993 அன்று மூல வழக்கின் மீது தமிழக அரசின் எதிர் தரப்பு வாதங்களை எடுத்து வைத்தோம். Voice(Consumer Care)Council என்ற நிறுவனம் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றவில்லை என்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்தபோது அதையும் நாங்கள் துணிவுடன் எதிர் கொண்டோம்.

4.11.1993 அன்று நடைபெற்ற அமைச்சர வைக் கூட்டத்தில், 69 சதவீத இடங்களில் 50 சதவீதத்தை மட்டும் பூர்த்தி செய்துவிட்டு, மீதம் உள்ள 19 சதவீத இடங்களை உச்சநீதிமன்றத்தில் இருந்து நமக்குச் சாதகமான ஆணை கிடைக்கப்பெற்ற பின்பு நிரப்பலாம் என்று முடிவு எடுத்தோம்.

சட்டரீதியான நடவடிக்கைகளை ஒரு புறம் எடுத்து வந்தாலும், தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வண்ணம்

9.11.1993 அன்று தமிழ்நாட்டில் 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து செயல்படுத்தத் தேவையான அரசியல் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைத் தமிழகச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றியதுடன், 16.11.1993 அன்று முழு கதவடைப்பு-பொது வேலை நிறுத்தத்தையும் மேற்கொண்டு மத்திய அரசுக்கு நமது உணர்வுகளை வெளிப்படுத்தினோம். தமிழகச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, நான் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். பின்னர் 26.11.1993 அன்று அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்களின் கருத்துக்களை நானே நேரில் கேட்டறிந்து, தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீட்டுமுறை தொடர, ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றுவது என்ற தீர்மானத்தைஒருமனதாக நிறைவேற்றினோம். அதன்படி, சட்டமன்றப் பேரவையில் ஒரு புதிய சட்டத்தை 31.12.1993 அன்று நிறைவேற்றி, 19.1.1994 அன்றே மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். எனது ஆணையின் பேரில், பல்வேறு கால கட்டங்களில், தமிழக அரசின் முதுநிலை அலுவலர்கள், மத்திய அரசின் பல்வேறு அமைச்சகத்துடன் தொடர்பு கொண்டு, இந்தப் புதிய சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். நேர்முகக் கடிதங்களும், டெலக்ஸ் செய்திகளும் பல்வேறு தினங்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

1994-95 கல்வி ஆண்டில், மாணவ மாணவியர்களைக் கல்வி நிறுவனங்களில் சேர்க்கின்ற போது இந்தப் பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் என்பதை அறிந்து, எப்படியேனும் விரைவில் புதிய சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்று தர வேண்டுமென, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி.நரசிம்மசராவ் அவர்களுக்கு 3.6.1994 அன்று நான் கடிதம் எழுதினேன். பிரதமரிடமிருந்து இது குறித்து பரிசீலனை செய்வதாக எனக்குப் பதில் கடிதம் வந்துள்ளதே தவிர, தமிழ்நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படும் என்ற உறுதியை அளிக்கவில்லை. எனவே, எனது ஆணையின்பேரில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14.6.1994 அன்று டெல்லியில் பாரதப் பிரதமர் திரு. பி.வி.நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்து, புதிய சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலை விரைவில் பெற்றுத் தர வேண்டும் என்றும், அவ்வாறு பெற்றுத் தரவில்லை என்றால் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள்.

தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளை மீண்டும் மத்திய அரசுக்கு உணர்த்துகின்ற வகையில், தமிழகம் முழுவதும் 17.6.1994 அன்று முழு கதவடைப்பு-பொது வேலை நிறுத்தம் மேற்கொண்டோம். அது மட்டுமின்றி அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்றுக்குத் தலைமை ஏற்று, டெல்லிக்குச்சென்று பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, தமிழக மக்களின் உணர்வுகளை எடுத்துரைப்பது என்று முடிவு செய்து உள்ளேன். பாரதப் பிரதமர் இதற்கென நாள் ஒதுக்கியவுடன், முறையான அழைப்பு அனைவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு நானும், தமிழக அரசும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூக நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு ஆக்கப் பூர்வமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிப்பதை விட்டுவிட்டு, குறுகிய அரசியல் லாபத்திற்காக, சிலர் தவறான செய்திகளைத் தமிழக மக்களுக்கு அளித்துப் பொய்ப் பிரச்சாரத்தைச் செய்து வருகின்றார்கள்.

உச்சநீதிமன்றத்தின் வழக்கின்மீது, தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை என்பது போன்ற ஒரு தவறான செய்தியை மக்கள் மத்தியிலே ஒரு சிலர் பரப்பி வருகின்றார்கள். உச்சநீதிமன்ற ஆணையை அவமதிப்பதாகத் தொடரப்பட்ட ஒரு வழக்கில் தமிழக அரசின் தலைமைச்



**69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.**

செயலாளரும், கல்வித் துறை மற்றும் சுகாதாரத் துறைகளின் செயலாளர்களும் நேரிடையாகப் பதில் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை எழுந்தது என்றால், எந்த அளவிற்கு இந்த வழக்கில் நமக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், 69 சதவீத இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும் என்பதற்காகவும், சட்ட ரீதியாகப் போராடி இருக்கிறோம் என்பது தெளிவாகும் என்று கருதுகிறேன்.

தமிழக அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனு மற்றும் தெளிவாக்க மனு போன்றவை தள்ளுபடி செய்யப்பட்ட பின்பும், உச்ச நீதிமன்றத்தின் ஆணையைச் செயல்படுத்த இயலாத சூழ்நிலைகளை விளக்கி நாம் தாக்கல் செய்த எதிர் மனுவும், உச்சநீதி மன்றத்தில் அவமதிப்பு வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கின்ற சூழ்நிலையில் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது எந்த அளவிற்கு ஒரு பொய்யான வாதம் என்பதைத் தமிழக மக்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

73 சதவீத இட ஒதுக்கீட்டு முறை கர்நாடக மாநிலத்தில் உச்சநீதிமன்றத்தின் ஆணைக்கு எதிராகச் செயல்படுத்தி வருவது போல, ஏன் தமிழ்நாடும் செய்யக்கூடாது என்று சிலர் கேட்டு வருகின்றார்கள். இரண்டு மாநிலங்களைப் பொருத்தவரையில் இடஒதுக்கீட்டுப் பிரச்சினை ஒன்று போலத் தெரிந்தாலும், சட்டரீதியாக அணுகுகின்றபோது, கர்நாடக மாநிலத்தைப் பொருத்தவரையில் அந்த அரசு பிறப்பித்த இட ஒதுக்கீட்டு ஆணையை எதிர்த்து நீதிமன்றத்தில் யாரும் வழக்கு தொடர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் இட ஒதுக்கீட்டு அரசு ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் பல வழக்குகள் நடைபெற்று ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன. எனவே, சட்டரீதியாக அத்தகைய ஆணைகள் தமிழ்நாட்டை மட்டும் கட்டுப்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. உச்சநீதிமன்றத்தின் ஆணையை எதிர்த்து வழக்குத் தொடராத நிலையில் கர்நாடக மாநிலத்தை நேரிடையாகப் பாதிக்கவில்லை. அதுமட்டுமின்றி, கர்நாடக மாநிலத்தைப் பொருத்தவரையில் பொருளாதார வசதி படைத்தவர்கள் எனக் கருதப்படும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், நிலச்சுவான் தார்கள், வருமான வரி மற்றும் விற்பனை வரி செலுத்துபவர்கள், ஒரு குறிப்பிட்ட வருமானத்



திற்கு அதிகமாக ஊதியம் பெறுகின்ற அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு, இட ஒதுக்கீடு தரப்படவில்லை. சில குறிப்பிட்ட தொழிலைச் செய்கின்ற மக்களுக்கு என்று 5 சதவீத இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பொருத்தவரையில் சமூக மற்றும் பொருளாதாரப் பேதமின்றி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இட ஒதுக்கீடு சலுகை வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, சட்டரீதியாக இரண்டு மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியானது அல்ல. ஆந்திராவிலும், மஹாராஷ்டிராவிலும் 50 சதவீதத்திற்கு மேலாக இட ஒதுக்கீட்டு முறை செயல்பட்டு வருவது போன்று சில தவறான தகவல்கள் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. ஆந்திர மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்பட்டோருக்கு, 47 சதவீத இட ஒதுக்கீடும், மஹாராஷ்டிராவில் 50 சதவீத இட ஒதுக்கீடும்தான் நடைமுறையில் உள்ளது. எத்தகைய தவறான தகவல்கள் மக்களுக்குத் தரப்படுகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம்.

அருணாசலப் பிரதேசத்தைப் பொருத்தவரையில் அம்மாநில மக்கள் தொகையில் கிட்டதட்ட 90 சதவீதத்தினர் மலைச் சாதியினர் என்பதைக் கருத்தில் கொண்டு, சட்டபூர்வமாக வழங்கப்பட்ட சிறப்புச் சலுகையாகும். அப்படிப்பட்ட ஒரு மாநிலத்தைத் தமிழ்நாட்டுடன் ஒரு சிலர் ஒப்பிட்டுக் காட்டுவது சற்றும் பொருத்தம் இல்லாத செயலாகும். காஷ்மீரைப் பொருத்த வரையில், இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தில் அவர்களுக்கு என வழங்கப்பட்ட சிறப்புச் சலுகையை மறைத்துவிட்டு, அரசியல் லாபத்திற்காகத் தமிழகத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதைப் பார்க்கும்போது உண்மையில் வேதனையாக இருக்கிறது.

தமிழக அரசின் சக்திக்கு உட்பட்டு, சட்டரீதியாக அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம். 69 சதவீத இட ஒதுக்கீடு தொடர்ந்து செயல்படுத்த இயலாத ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கும், தமிழக அரசு இயற்றிய புதிய சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தை இதுவரை பெற்றுத் தராததற்கும் மத்திய அரசின் மெத்தனப் போக்குத் தான் காரணம் என்பது தான் உண்மை நிலை. நானும், தமிழக அரசும் எடுத்து வருகின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொடுப்பதற்கு மாறாக, குறுகிய அரசியல் லாபத்திற்காக, எங்களுடைய முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவித்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூக நீதி பெற்றுத் தருகின்ற எங்கள் செயல்பாட்டைப் பலவீனப்படுத்துகின்ற முயற்சியில், யார் ஈடுபட்டாலும் தமிழக மக்கள் அவர்களை ஒதுக்கித் தள்ளி விடுவார்கள் என்பதைக் காலம் விரைவில் உணர்த்தும்.

இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேல் அமையக்கூடாது என்று உச்சநீதிமன்றம் தான் முதன் முதலில் ஆணையிட்டது. நம்மைப் பொருத்தவரையில் 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடரவேண்டும் என்று தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றோம்.

உச்சநீதிமன்றத்தின் தலையீட்டை மாற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்கும், மத்திய அரசுக்கும் தான், அதிகாரமும் உரிமையும் உண்டு. முதன் முதலாக இந்திய அரசியல் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட திருத்தமே, தமிழ்நாட்டில் அன்று எழுந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணத்தான் என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டு உள்ளேன்.

நாம் இயற்றிய சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்று தந்து, தமிழ்நாட்டில் சமூக நீதியை நிலை நாட்டுவதற்கு, மத்திய அரசுக்குப் பொறுப்பும், கடமையும் உண்டு. எனது கரங்களை வலுப்படுத்துகின்ற வகையில், மற்றவர்கள் அனைவரும் சேர்ந்து மத்திய அரசின் கடமையைச் சுட்டிக் காட்டி, குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உதவி புரிந்திருந்தால், இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு தி.மு.கழகத் தலைவர் திரு. கருணாநிதி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் என்னை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்து உள்ளார்கள். அதுமட்டும் இன்றி, கர்நாடக மாநிலத்தைக்



69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பல்வேறு கட்சிக் குழுவினருடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்தார்.

காரணம் காட்டி, நீதிமன்ற ஆணையை ஏன் மீறக் கூடாது என்று கேட்கிறார்கள். நம்மைப் பொருத்தவரையில் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் கர்நாடக மாநிலம் உச்சநீதி மன்ற ஆணையை மதிக்க வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம். நீதித்துறையின் மீதும், நீதி மன்றங்களின் மீதும் அசைக்கமுடியாத நம்பிக்கையை வைத்துள்ள நாம், அதே நீதிமன்ற ஆணையை மீறினோம் என்றால், காவிரிப் பிரச்சினையில் கர்நாடக மாநிலம், நீதிமன்ற ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்ற தார்மீக உரிமையை இழந்துவிட மாட்டோமா? அதே நேரத்தில், உச்ச நீதிமன்றத்தின் ஆணையினால் எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் கை கட்டி இருக்க வேண்டியதில்லை. எனவேதான் ஒரு புதிய சட்டத்தை உருவாக்கி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அச்சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைக்கின்றபோது, அது சட்டமாகிவிடும். அப்போது நீதிமன்ற ஆணை நம்மைக் கட்டுப்படுத்த இயலாது. அதே நேரத்தில் தமிழகத்தில் தொடர்ந்து 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறையைச் சட்டரீதியாக நாம் செயல்படுத்த முடியும்.

இன்று என்னையும், தமிழக அரசையும் குறைகூறுகின்ற பாணியில் கேள்வி கேட்கின்ற அரசியல் கட்சித் தலைவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று தராத மத்திய அரசை ஏன் தட்டிக் கேட்கத் தயங்குகிறார்கள்? நானும் தமிழக அரசும் எடுத்துள்ள நடவடிக்கைகளை குறுகிய அரசியல் லாபத்திற்காக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். என்னை எதிர்த்துப் போராட்டம் நடத்துவேன் என்று அறிவிக்கின்ற வாழப்பாடி ராமமூர்த்தி போன்றவர்கள், டெல்லியை எதிர்த்து அல்லவா போராட்டம் நடத்த வேண்டும்; மத்திய அரசை எதிர்த்து அல்லவா கொடி பிடிக்கவேண்டும்? எனக்கும் தமிழக அரசுக்கும் அக்கறை இல்லை என்று வெட்டிப் பேச்சு பேசுகின்ற நேரத்தில், தமிழக மக்கள் சார்பாகப் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் நலனில் அக்கறை கொண்டு மத்திய அரசைத் தட்டிக் கேட்டிருக்க வேண்டாமா?

தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினையில் ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வழி காண வேண்டும் என்ற அக்கறை இல்லாமல், குறுகிய அரசியல் கண்ணோட்டத்துடன், அடுத்த பொதுத் தேர்தலில் யாரோடு கூட்டணி அமைப்பது என்ற ஒரே சிந்தனையில் இருப்பவர்கள், இதை ஒரு காரணமாக்கிக் கொண்டு எனக்கு எதிராக ஒரு 'கூட்டணியை' உருவாக்க முயற்சி

செய்கிறார்கள். தமிழக மக்களுக்குச் சமூக நீதியைப் பெற்றுத் தருவதற்குப் பாடுபடுவதை விட்டுவிட்டு, தவறான அணுகுமுறையுடன் செயல்படுபவர்களைத் தமிழக மக்கள் நிச்சயமாகத் தட்டிக் கேட்பார்கள்.

பாராளுமன்றத்தில், தமிழ்நாட்டிற்குத் தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்துவதை விட்டுவிட்டு, இங்கு நான்கு பேர் சேர்ந்து கொண்டு எனது செயல்களைக் குறை கூறி மக்களைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபடுவது விரும்பத்தக்கது அல்ல. மக்களுடைய பிரச்சினையை அரசியலாக்கி, அரசியல் லாபம் தேட முயலும்போது, பொதுமக்கள் உயிர்நாடிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காமல் அந்தப் பிரச்சினை அடிப்பட்டுப் போகும் என்பதைக் கூட இவர்கள் உணரமுடியாது அளவிற்கு, என் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி இவர்களது கண்களையும் கருத்தையும் மறைத்துள்ளது.

> *கோயில்*
> *கற்களால் கட்டப்படும் கோயில்களைவிட, நரம்பாலும், தசையாலும் கட்டப்பட்டுள்ள மனித உடல்களே உண்மையான கோயில்கள்.*
> *-அண்ணல் காந்தியடிகள்*

சமூக நீதியைப் பாதுகாக்க, சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்ற எனக்கும், எனது அரசிற்கும் இவர்கள் உதவிக்கரம் வழங்கவில்லை என்றாலும், எங்களது முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில் செயல்பட்டால் தமிழக மக்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மத்திய அரசிடம் துணிவுடன் தட்டிக் கேட்க வேண்டியவர்கள், இங்கே மாநில அரசைப் பார்த்து குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அவர்களுக்கு இருக்கும் நாட்டத்தைவிட, எனக்கு எதிராக அடுத்த தேர்தலில் ஒரு கூட்டணியை அமைப்பதில் இருக்கின்ற நாட்டம் தான் அதிகமாக இருக்கின்றது.

எந்தச் சமூக நீதி பெறுவதற்காக தந்தை பெரியார், பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பாடுபட்டார்களோ, அதே புனிதப்பணியில், அவர்கள் வழி நடந்து வருகின்ற நாங்களும் வீரத்துடனும், விவேகத்துடனும், உறுதியுடனும் செயல்பட்டு வருகிறோம் என்பதை நிரூபிக்கும் வண்ணம் 16.6.1994 அன்று ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவு ஒன்றை அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொண்டோம்.

69 சதவீத இட ஒதுக்கீடு அமலில் இருக்கும் போது, கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எத்தனை இடங்கள் கொடுக்கப்பட்டு வந்ததோ, அத்தனை இடங்கள் இந்த ஆண்டும் கிடைக்கும் வண்ணம், அந்தக் கல்வி நிறுவனங்களில் உள்ள இடங்களின் எண்ணிக்கையைத் தேவையான அளவிற்குக் கூடுதலாக்குவது என முடிவு செய்துள்ளோம். சமூக நீதியைக் காக்கும் இந்த முயற்சிக்குத் தேவையான ஆசிரியப் பெருமக்கள், ஆய்வுக் கூடங்கள், கட்டட வசதிகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணையிட்டுள்ளேன். கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையே, இந்தக் கூடுதல் இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதால் தமிழக அரசுக்குக் கூடுதல் நிதிச் சுமை ஏற்படும்; அதை நாங்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். சமூக நீதியைப் பாதுகாப்பதற்கு நானும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும், தமிழக அரசும் என்றும் பின் வாங்கமாட்டோம் என்பதைத் தான் இது காட்டுகிறது. இந்த உயிர்நாடிப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஆதரவையும், ஒத்துழைப்பையும் அனைவரும் நல்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் குறுகிய அரசியல் லாபத்திற்காக, ஒட்டுமொத்த தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்காமல், தேவையற்ற செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களைத் தமிழக மக்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ. ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

69% இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு
மேதகு குடியரசுத் தலைவர் அங்கீகாரம்:

# சத்திய வேள்விக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி!

## - மாண்புமிகு முதல்வர் அறிக்கை

தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வண்ணம், 69 சதவிகித இடஒதுக்கீடு முறை தமிழ்நாட்டில் என்றென்றும் தொடருவதற்காகத் தமிழகச் சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பி வைத்த சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவர் தனது ஒப்புதலையும், அங்கீகாரத்தையும் அளித்துள்ளார் என்ற இனிய செய்தியை, எனது அன்பிற்குரிய தமிழக மக்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து, தமிழகத்தில் சமூக நீதியைக் காப்பதற்காக நாம் மேற்கொண்ட 'சத்திய வேள்வி'க்குக் கிடைத்த மாபெரும் வெற்றி இது. சமூக நீதியைக் காப்பதிலும், தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதிலும் தனக்கு எத்தகைய ஈடுபாடு உண்டு என்பதை வெளிப்படுத்திய மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு எனது சார்பிலும், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், சமுதாய நல இயக்கங்களின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் புனிதப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு,



தமிழகத்தில் சமூக நீதியைக் காப்பதற்காக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற் கொண்ட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும் எனது

நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூக நீதியைக் காக்க நாங்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய அமைச்சரவையும் தங்களது ஒத்துழைப்பையும், ஆதரவையும் தொடர்ந்து நல்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வெற்றி நாம் மேற்கொண்ட 'சத்திய வேள்வி'க்குக் கிடைத்த முதல்கட்ட வெற்றியாகும். நமது இலட்சியங்கள் நேரானவை; உத்தமமானவை; சமூக நீதியைப் பெற்றுத் தரும் சத்திய வல்லமை படைத்தவை என்பதை உலகிற்கு உணர்த்துகின்ற மகத்தான வெற்றி ஆகும்.

சமூக நீதிச் சரித்திரத்தில் 'பொன் எழுத்துக்களால்' பொறிக்கப்பட வேண்டிய ஒரு அற்புதமான நிகழ்ச்சி இது. சரித்திரத்தில் தனக்கு என ஒரு இடத்தைப் பெற்றுள்ள இந்தச் சாதனையை எனது அன்பிற்குரிய தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் உரித்தாக்குவதில் நான் பெருமைப்படு கின்றேன். தனக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்று தமிழக மக்கள் ஒவ்வொருவரும், மகிழ்ச்சி அடையவேண்டும் என்பதே எனது எண்ணம். இந்தப் புனிதப் பணியில் எனக்கு உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்து ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், சமுதாய நல இயக்கத் தலைவர்களுக்கும், என் மீது அன்பையும், பாசத்தையும் பொழியும் எனது அன்பிற்குரிய தமிழக மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நீதியைப் பெற்றுத் தரும் ஒரு அறப்போராட்டத்தில் நாம் தொடர்ந்து வெற்றிபெறுவோம் என்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறி, ஒரு வெற்றிகரமான தொடக்கம், இனி தொடர்ந்து நாம் வெற்றி பெறுவோம் என்பதற்கும் இனி ஒரு அடிப்படை. எத்தகைய சக்திகள் நமக்கு எதிராகச் செயல்பட்டாலும், அந்தச் சக்திகள் அனைத்தையும் எளிதில் வெல்லுகின்ற ஒரு நெஞ்சுரத்தையும், வலிமையையும் இந்த வெற்றி நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சமூக நீதியைக் காக்கும் நமது 'சத்திய வேள்வியை' மேலும்



☐ **நமது மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதிப்பேராய் இருக்கிற மகளிரைப் பாதுகாப்பாக உயர்த்திவிடுவதுதான் சுதந்திரம் பெற்ற நாகரிகமுள்ள சமூகத் தில் ஓர் அரசின் கடமை என்ற கருத்தில் பெண்கள் முன்னேற்றம், பெண்கள் உயர்வு ஆகியவற்றுக்கு எல்லா முன்னுரிமைகளும் வழங்கப்படும்.**

தீவிரமாகவும், முழு வேகத்துடனும் மேற்கொள்வோம் என்று உறுதிகூற விரும்புகிறேன்.

அரசியல் அமைப்புச் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளச் செய்து, ஒவ்வொரு மாநிலத்திற்கும், அந்தந்த மாநிலத்தில் நிலவுகின்ற பல்வேறு சூழ்நிலைகளின் அடிப்படையில், இட ஒதுக்கீட்டு அளவை நிர்ணயம் செய்யும் அடிப்படை உரிமையைப் பெற்ற தருவதுதான் நமது உறுதியான மற்றும் இறுதியான கொள்கையாகும். இந்தக் கொள்கையை முன்வைத்து நாம் தொடரும் இந்தப் புனிதப் பணிக்குத் தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், சமுதாய நல இயக்கங்களும், எனது அன்பிற்குரிய தமிழகத்து மக்கள் அனைவரும் என்னுடன் துணை நிற்பார்கள்; எனது கரத்தை வலுப்படுத்துவார்கள் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.

'பகுத்தறிவுப் பகலவன்' தந்தைப் பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் நமக்குக் காட்டிச்சென்ற புனிதப் பாதையில் தொடர்ந்து நடைபோட்டு, அவர்கள் கட்டிக் காத்த சமூக நீதியை, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் ஆகிய அனைத்து மக்களுக்கும் பெற்றுத் தருவதில் தொடர்ந்து முனைப்புடன் செயல்படுவோம் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்.

**ஜெ. ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்



## இட ஒதுக்கீடு - தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினை:

# முழுமையான நிரந்தரத் தீர்வே நமது ஒரே குறிக்கோள்!

## கன்னியாகுமரி மாவட்ட அரசு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

முக்கடலும் சங்கமிக்கும், முத்தமிழும் தழைத்தோங்கும், தனிப்பெரும் சிறப்பை, தன்னகத்தே பெற்று விளங்கும், தமிழகத்தில் தென்கோடித் திருத்தலம், கன்னியாகுமரி! இயற்கை வளங்களும், இனிய சூழல்களும் தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டத்திற்கு வருகை தந்து, உள்ளங்களில் உவகையுடனும், எண்ணங்களில் எழுச்சியுடனும், முகங்களில் மலர்ச்சியுடனும், அலை கடல் எனத் திரண்டு என்னைக் காண்பதற்கும், என் பேச்சைக் கேட்பதற்கும், பெருந்திரளாக வருகை தந்திருக்கும், உங்கள் அனைவரையும் இன்று காண்பதில், நான் பேருவகையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நமது அருமைத் தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியத் திருநாட்டிற்கே, தென் திசை எல்லையாகத் திழ்ந்திடும், தனிச் சிறப்பைப் பெற்று விளங்கும், கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாட்டின் இயற்கை எழில்மிக்க மாவட்டங்களுள் ஒன்று. சரித்திரமும், சமயமும், பன்னெடுங்காலமாய் கோலோச்சிய, இந்தத் தென்குமரி மாவட்டத்தின் பெருமைகளையும், சிறப்புக்களையும், எடுத்துச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பரந்து கிடக்கும், நமது பாரத பூமியின் இதயம், இங்கே தான் மறைந்து கிடக்கிறது என்பதை, தனது மெய்ஞான உள்ளுணர்வால், உலகிற்கு எடுத்துக்காட்டிய 'இளம் துறவி', சுவாமி விவேகானந்தர் அவர்கள், நமது நாட்டின் ஆன்மீகப் பெருமையை, உலகிற்குப் பறைசாற்றுவதற்காக, குமரி முனையிலிருந்துதான், தனது புனிதப் பயணத்தை மேற்கொண்டார் என்பதை நினைவு கூரும்போது, நமது மனம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறது.

1992-ஆம் ஆண்டு, புயல் வெள்ளத்தால், இந்த மாவட்டத்தின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டபோது, நிவாரண உதவிகளுடன் விரைந்து வந்து, உங்களைச் சந்தித்தேன். இன்று நாகர் கோயில் நகரில் நடைபெறும், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் காணுகின்ற நல்வாய்ப்பு, கிடைத்ததை எண்ணி நான் அகமகிழ்கிறேன்.

மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தமிழகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும், கடந்த மூன்று ஆண்டுக் காலமாக, வெற்றிப் பாதையில் வீரநடை பயின்று வரும் உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு உங்கள் அரசு - நிகரற்ற சாதனைகளைப் படைத்து, வளர்ச்சிப் பாதையில், துரித நடை போட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

அதே உணர்வுடன்தான், இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு, ஏற்படும் குந்தகங்களை முறியடிப்பதிலும், சமூக நீதியைப் பெற்றுத் தருவதிலும், நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து




வருகிறோம். ஆனால், சிலர் தமிழ கத்தின் உயிர் மூச்சுப் பிரச்சினை யான, 69 சதவிகித இட ஒதுக் கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைவிட, குறுகிய கண் ணோட்டத்துடன், அரசியலாக்கு கின்ற முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எங்களைப் பொருத்தவரையில், தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக் களுக்கு, சமூக நீதி பெற்றுத் தர வேண்டும் என்பதிலும் அவர் களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு, இட ஒதுக் கீட்டை 69 சதவிகித அளவில் தொடர வேண்டும் என்பதிலும், ஆத்மார்த்த ஈடுபாடு உண்டு. எனவே தான், உச்சநீதி மன்றத்தின் ஓர் ஆணையால், எழுந்த பிரச் சினைக்குத் தீர்வு காண்பதற்கு, "அரசியல் நிர்ணய சட்டத்தில், தேவையான திருத்தங்களை மேற் கொண்டு, 69 சதவிகித இட ஒதுக் கீடு, தமிழ்நாட்டில் என்றென்றும் தொடர்ந்திட வேண்டும்" என்று, 9.11.1993 அன்றே, தமிழகச் சட்ட மன்றப் பேரவையில், ஒரு தீர் மானத்தை ஒரு மனதாக நிறை வேற்றி, மத்திய அரசிற்கு அனுப்பி வைத்தோம். 16.11.1993 அன்று முழு கடையடைப்பு பொது வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு, இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை, மத்திய அரசுக்கு உணர்த்தினோம். ஆனால், மத்திய அரசிடமிருந்து, இன்றுவரை, எந்தப் பதிலும் கிடைக்கப் பெறவில்லை.

இந்தப் பிரச்சினையில், அரசியல் கட்சிகளிடையே, ஒருமித்த ஒரு பொதுக் கருத்தை, உருவாக்க வேண்டும் என்பதற்காக, நான் அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை, 26.11.1993 அன்று கூட்டினேன். அந்தக் கூட்டத்தில், 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தமிழ்நாட்டில் என்றென்றும் தொடர்வதற்கு, அரசியல் நிர்ணயச் சட்டம், பிரிவு 31 சி-ன் கீழ், நமது மாநில அளவில், ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது என்ற தீர்மானம், ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது. அந்த முடிவின் அடிப்படையில், 31.12.1993 அன்று, சட்டமன்றப் பேரவையில், ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்பு தலைப் பெற்றுத் தரும்படி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள் ளோம்.

ஒட்டுமொத்த தமிழக மக்களின், உள்ளார்ந்த உணர்வுகளை மத்திய அரசிற்கு வெளிப்படுத்தவும், புதிய சட்டத்திற்குக் குடியரசுத் தலை வரின் ஒப்புதலைப் பெற்றுத் தர வலியுறுத்தவும், 17.6.1994 அன்று, முழு கடை அடைப்பு பொது வேலை நிறுத்தத்தை மேற் கொண்டோம்.

புதிய சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்பு தலைப் பெற்றுத்தர வேண்டும் என்று வற்புறுத்துவதற்கும், அர சியல் நிர்ணயச் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும், என்று வலியுறுத்து வதற்கும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடனும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களையும், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களையும் சந்திப்ப தற்காக, நேரம் ஒதுக்கித் தரக் கேட்டு இருக்கிறேன்; டில்லி பயணத்திற்குத் தயாராக இருங்கள் என்று, அனைத்துக் கட்சித் தலை வர்களுக்கும் கடிதம் எழுதினேன். எனது அழைப்பை ஏற்று, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, அனைவரும் ஓரணியில் சேருவார்கள், என்ற மக்களின் எதிர்பார்ப்பை மீறி, சிலர், என்னுடன் டில்லிக்கு வர மறுத்த தோடு, முதலமைச்சர் எங்களை மதிக்கவில்லை என்றும், வேறு பல குதர்க்கமான வாதங்களையும் எடுத்துக் கூறி, அறிக்கை விட் டார்கள்.

இருப்பினும், இந்தியப் பிரதமர், தமிழகத்தில் இருந்து வருகின்ற, அரசியல் கட்சித் தலைவர்களின் குழுவைச் சந்திப்பதற்கு, நேரத்தை ஒதுக்கியதற்குப் பின்பு, மீண்டும் எல்லா அரசியல் கட்சித் தலை வர்களுக்கும், தந்தி மூலமாக அந்தத் தகவலை அனுப்பி, அழைப்புவிடுத்தேன். அரசியல் காரணங்களுக்காக, மக்கள் நலனை மதிக்காமல், சிலர் இந்தக் குழுவில், இடம் பெறாமல் ஒதுங்கி விட்டார்கள் என்பதை, மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் எனது அழைப்பை ஏற்று, என்னுடன் வந்து ஒத் துழைத்த கட்சித் தலைவர்களுடன், இந்தியப் பிரதமர் அவர்களை, 25.6.1994 அன்று சந்தித்து, புதிய சட்டத்திற்குக் குடியரசுத் தலை வரின் ஒப்புதலைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் அரசியல் நிர்ணயச் சட்டத்தில், தக்க திருத் தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சி னையில், தமிழக மக்களின் உள் ளார்ந்த உணர்வுகளை மதித்து, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு முன் வர வேண்டும் என்றும் முன் வராத பட்சத்தில், ஏற்படும் விளைவுகளையும் எடுத் துரைத்தேன் - வாதாடினேன்.

இந்திய நாட்டின் Attorney

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் **6.7.94** அன்று கன்னியாகுமரி மாவட்ட அரசு விழாவில், நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரையின் முழு விவரம்:

General வெளி நாடு சென்றிருப்பதால், அவர் திரும்பிய பின்பு, இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண, நடவடிக்கை எடுப்பதாக, பிரதமர் என்னிடம் எடுத்துரைத்தார்கள். சட்ட ரீதியாகத் தீர்வு காண, மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். அதற்குக் கால அவகாசம் கொடுத்து, அவர்களின் முடிவுக்குக் காத்துக் கொண்டிருக்கும், இத்தகைய ஒரு சூழ்நிலையில், தமிழக மக்களின் நலனைக் காக்க, ஓரணியில் நின்று, நமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய, ஒரு கால கட்டத்தில் மத்திய அரசிற்கு நமது ஒற்றுமையை நிரூபித்து, நமக்கு வேண்டிய அரசியல் சட்டத் திருத்தத்தைப் பெற வேண்டிய நேரத்தில் சிலர் எதிர்மறையான செயல்களில் ஈடுபட்டு வருவதும், அரசியல் ரீதியாக எங்களால் எதிர்க்க முடியும் என்றாலும், பொது மக்களின் நலன் தாக்க, ஓரணியில் திரண்டு நிற்க, இவர்கள் மறுப்பதும்தான், வருத்தமாக உள்ளது.

மேலும், ஒரு சில அரசியல் கட்சிகள், இந்தப் புதிய சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்தாலும், அது செல்லுபடியாகாது என்றும், அரசியல் நிர்ணயச் சட்டத்தில், திருத்தங்களை மேற்கொள்வதுதான், இந்தப் பிரச்சினைக்குச் சரியான பரிகாரம் என்றும், திடீரென ஆலோசனை கூறத் தொடங்கிவிட்டார்கள். சட்டமன்றப் பேரவையில், முதன் முதலில் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்ததே, தக்க அரசியல் சட்டத் திருத்தத்தை, மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், ஒரு புதிய சட்டத்தை நம் மாநிலத்திற்காக, நாமே இயற்றிக் கொள்ள வேண்டும் என்ற முடிவோ, நானோ, அல்லது என்னுடைய அரசோ, தனிப்பட்ட முறையில் எடுத்த முடிவு அல்ல. 26.11.1993ந் தேதியன்று, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடிய, ஒரு கூட்டத்தில் தான், இத்தகைய முடிவு எடுக்கப்பட்டது.

நமது மாநிலத்தில் ஒரு புதிய சட்டத்தை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 31 சி-ன் கீழ், இயற்ற வேண்டும் என்று, ஒருமனதாக அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தில், யார் யார் கையெழுத்து இட்டார்களோ, எந்த எந்த அரசியல் கட்சிகள், அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக, தங்கள் கருத்தைத் தெரிவித்தார்களோ, அவர்கள் அதை முழுமையாக மறைத்துவிட்டு, இன்று திடீரென, பல்வேறு அரசியல் காரணங்களுக்காக, ஒரு புதிய கருத்தை முன்வைக்கிறார்கள்.

அன்று அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், ஒரு கருத்தைத் தெரிவித்துவிட்டு, ஒரு தீர்மானத்தைப் போட்டுவிட்டு, இன்று சிலர், இவ்வாறு மாற்றிப் பேசிவருவது, உண்மையிலேயே வருத்தத்தைத் தருகிறது. இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நல்ல எண்ணம், அவர்களிடம் இல்லை என்பதைத்தான், இது எடுத்துக் காட்டுகிறது என்று கருதவேண்டி உள்ளது.

எது எப்படி இருந்தாலும், எங்களைப் பொருத்தவரையில், இந்தப் பிரச்சினைக்கு, முழுமையான தீர்வு காண வேண்டும் என்பதே எங்களின் ஒரே குறிக்கோள். எனவே தான், இந்தப் புதிய சட்டத்திற்கு, குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைக் கேட்பதோடு, அரசியல் நிர்ணயச் சட்டத்திலும், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும், வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்.

50 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை, தமிழக அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது என்று, மக்கள் மத்தியில், உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தி பரப்பப்படுகின்றது. 50 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை நாங்கள் ஒப்புக் கொண்டிருந்தால், உச்சநீதிமன்றத்தில், வழக்கு எப்படி இன்னும் நிலுவையில் இருக்க முடியும்?

எதிர் மனு - Counter Affidavit தாக்கல் செய்திருக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்காதே? தெளிவாக்க மனுவும், மறு பரிசீலனை மனுவும், தாக்கல் செய்யப்பட வேண்டிய அவசியம் எழுந்திருக்காதே?

ஒரு நீதிமன்றத்தின் ஆணையை, மதிப்பது என்பது வேறு அதே ஆணையை ஏற்றுக் கொள்வது என்பது வேறு. சட்டப்படி அமைந்துள்ள ஒரு அரசு, அரசியல் நிர்ணய சட்டத்தின் கீழ், இயங்க வேண்டிய சூழ்நிலையில், நாம் உச்சநீதிமன்ற ஆணையை மதிக்கின்றோம். ஆனால் உச்சநீதிமன்றத்தின் ஆணையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதுதான் உண்மை நிலை. எனவேதான், நாம் ஏற்றுக் கொள்ளாத, ஏற்றுக் கொள்ள விரும்பாத ஆணை

யினால், ஏற்படும் விளைவுகளைத் தவிர்க்க உடனடியாகப் புதிய சட்டத்தை நிறைவேற்றி அதற்கு ஒப்புதல் கேட்கிறோம். அவசியம் என்றால், அரசியல் நிர்ணயச் சட்டத்தில், திருத்தத்தையும் மேற் கொள்ள வேண்டும், என்றும் வற்புறுத்துகிறோம்.

தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச் சினையில், ஒரு நிரந்தரத் தீர்வு காண, நாம் ஆக்கபூர்வமான, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். இந்தப் பிரச் சினைக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காணாமல், ஓயமாட்டோம் என் பது மட்டும் உறுதி.

பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட பின்பு, தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, அப்பகுதி வாழ் மக்களின் தேவைகளை, உணர்ந்து வைத்திருந்ததால்தான் நான் முதலமைச்சர் ஆன பின்பு, அந்த இனிமையான அனுப வங்கள், அந்தப் பகுதி வாழ் மக்கள் நலன்காக்க, நல்ல பல திட்டங் களைத் தீட்டுவதற்கு, எனக்கு உதவியாக அமைந்துள்ளன. அதே அடிப்படையில், இந்த கன்னியா குமரி மாவட்டத்தின், முக்கியப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க, இந்த அரசு முனைப்புடன் செயல் பட்டு வருகிறது.

இன்று, இந்த மாவட்டத்தில், 108 கோடி ரூபாய் மதிப்புள்ள பல் வேறு திட்டங்களுக்கு, அடிக்கல் நாட்டியும், சில திட்டங்களைத் துவக்கியும் உள்ளேன். நலத்திட்ட உதவிகளை வழங்கவும் உள்ளேன். இன்று, 36 கோடி ரூபாய் மதிப் புள்ள, அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இம்மாவட் டத்து நலிந்த பிரிவைச் சார்ந்த, 30,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு வழங்க உள்ளேன். சற்று முன்பு, 67 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும், 5 கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடங்களையும், திட்டங்களையும் துவக்கி வைத்த திலும், நான் பெருமகிழ்ச்சி அடை கின்றேன்.

ஆரல்வாய்மொழியில் அமைந் துள்ள, மாவட்டக் கூட்டுறவு நூற் பாலை வளாகத்தில், 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில், 4 காற்றாலைகளை அமைப்பதற்காக, அடிக்கல் நாட்டியதில், பெருமிதம் அடைகின்றேன். ஏற்கெனவே, மரபு சாராத் துறையில், குறிப்பாக, காற்றாலை மூலம், மின் உற்பத்தித் தயாரிக்கும் துறையில், அகில இந்திய அளவில், தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு, ஒரு முன்னோடி யாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மின் உற்பத்தியில், புதிய சரித் திரத்தை உருவாக்கி வரும் நாம், அதில் தன்னிறைவைக் காணு கின்ற நாள், வெகு தூரத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செண்பகராமன் புதூரில், 40 கோடி ரூபாய் மதிப்பில், 230 கிலோ வாட் திறனுள்ள, மின் நிலையம் அமைப்பதற்கு, இன்று நான் அடிக்கல் நாட்டி உள்ளேன். இந்த மாவட்டத்தின் மின் தேவை யைப் பூர்த்தி செய்வதில், இது ஒரு மைல் கல்லாக அமையும், என்று நம்புகிறேன். பல ஆண்டுகளாக, கிடப்பில் போட்டுவிடப்பட்டி ருந்த, இந்தத் திட்டத்திற்கு வடிவம் கொடுத்து, பொருளாதார ஆதாரத் தைத் திரட்டி, செயல்படுத்த முன் வந்த ஒரே அரசு, உங்கள் சகோதரி யின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு தான் என் பதைத் தெரிவிப்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதுமட்டுமின்றி, இந்த மின் நிலையம்தான், கன்னியாகுமரி மாவட்டத்திலேயே, 230 கிலோ வாட் மின் திறன் கொண்ட, முதல் மின் நிலையம் என்ற செய்தி, நமக்கு எல்லாம் மகிழ்ச்சி தரும் செய்தி ஆகும். இந்த மின் நிலையம், 1996 ஆம் ஆண்டில், செயல்படும்போது, இம்மாவட்டம் முழுவதிலும், தடையற்ற, நிலையான மின்சாரம் கிடைக்கும் மின் தடங்கல் தவிர்க்கப்படும் மின் சக்தி இழப்பு குறையும் கூடுதல் மின் இணைப்புகள் வழங்க இயலும். இதுமட்டுமின்றி, நாகர் கோயில் புறநகர் மின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மின் வினியோகத் தைச் சீராக்குவதற்கு, 3 கோடி ரூபாய் செலவில், நிறைவேற்றப் பட்டு வரும் திட்டம் முன்சிறைக் கிராமத்தில், 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள துணை மின் நிலையம் ஆகியவை இம்மாவட் டத்தில் மேலும் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு, வழி வகுக்கும் என்பதை எண்ணி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

மருத்துவத் துறையைப் பொருத்த வரையில், நாகர்கோயிலில் அமைந் துள்ள, அரசு மருத்துவமனையில், குழந்தைகளுக்கு என்று பிரத்தி யேகமாக, 10 படுக்கைகள் கொண்ட, ஒரு தனிப் பகுதியை அமைப்பதற்கும் வெள்ளிச் சந்தை,





கிள்ளியூர், அருமனல்லூர் ஆகிய இடங்களில், ஆரம்பச் சுகாதார நிலையங்களை, 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கும், அடிக்கல் நாட்டி உள்ளேன்.

எங்கள் அரசைப் பொருத்த வரையில், ஒரு குடிநீர் ஆதாரம் கூட இல்லாத கிராமம், தமிழ கத்தில் இருக்கக் கூடாது, என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில், துரிதமாகச் செயல்பட்டு வரு கின்றது. அந்த எண்ணத்தின் ஒரு வெளிப்பாடுதான், 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில், இன்று என்னால் அடிக்கல் நாட்டப் பட்ட, காட்டாத்துறை முளகுமுடு வாழ்வச்சகோஷ்டம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

1 இலட்சம் பேர் பயன்பெறும் இத்திட்டம், இப்பகுதிவாழ் மக் களின் அடிப்படைத் தேவையான, குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதை எண்ணி, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மீனவப் பெருங்குடி மக்களின், வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், அவர்களின் பொருளாதார மேம் பாட்டிற்கும், உங்கள் அரசு, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆண் டொன்றுக்கு மீனவர்களுக்காக 1000 குடியிருப்புகள் மட்டுமே, கட்டப்பட்டு வந்த நிலையை மாற்றி, தற்போது ஆண்டொன் றுக்கு 2000 வீடுகளை ஒவ் வொன்றும் 26,000 ரூபாய் மதிப்பில் கட்டி, இலவசமாக வழங்கி வருகின்றோம். அந்த வகையில், கடந்த மூன்றாண்டுகளில் மட்டும், இந்த மாவட்டத்தில், 3 கோடி ரூபாய் செலவில், 1124 வீடுகள், மீனவர்களுக்குக் கட்டித் தரப் பட்டுள்ளன. மேலும், 247 குடி யிருப்புகள், அழிக்கால், குறும் பனை, மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில், இந்த ஆண்டு கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும், தமிழக மீனவர்களுக்கு, இலங்கைக் கடற்படையினரால், இழைக்கப்படும் கொடுமைகளுக்கு, ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று, நான் தொடர்ந்து இந்தியப் பிரதமரை யும், மத்திய அரசையும், வற்புறுத்தி வருகின்றேன். என்னுடைய வற் புறுத்தலின் காரணமாகத்தான், இன்று இலங்கைக் கடற்படை யினரின் அத்துமீறல்கள், கட்டுப் படுத்தப்பட்டுள்ளன. மேலும், IBL எனப்படும், 'சர்வதேச எல்லைக் கோட்டை', தவறுதலாகக் கடக் கும்போது, நமது மீனவர்களை, மனிதாபிமான முறையில் நடத்து வதற்கும் மீனவர்களின் உயிருக்கு, உத்தரவாதம் பெற்றுத் தரவும் பாதிக்கப்படும் மீனவர்களின் குடும்பங்களுக்கு, தக்க நிவாரண உதவித் தொகை வழங்கவும் எனது வற்புறுத்தலின் காரணமாக, இந்தியாவும், இலங்கையும், ஒரு ஒப் பந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்கு, வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரங்களில் வாழும் மீனவர்கள், ஆழ்கடலுக்குச் செல் லாமலேயே, இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்து, தங்களது தொழிலை மேற்கொள்ள, உங்கள் அரசு, 150 எக்டேர் நிலத்தை ஒதுக்கி உள்ளது. இத்திட்டத்தை, 16 கோடி ரூபாய் செலவில் செயல் படுத்த, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் உள்ள, 1,20,000 மீனவர்கள், பயன் பெறும்வண்ணம், மீன்பிடித் தொழில் செய்ய இயலாத, 4 மாதக் காலத்திற்கு, மாதம் 270 ரூபாய், நிவாரண நிதி வழங்கும் திட்டமும், தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தைப் பொருத்த வரையில், இத்திட் டத்தின் கீழ், 40,000 மீனவர்கள், பயன்பெற்று வருகிறார்கள். இதே போல், மீனவர்கள் மரணம் அடை யும்போது, அவர்களுடைய குடும் பத்திற்கு வழங்கப்பட்டு வந்த, 25,000 ரூபாய் நிவராணத் தொகையை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 50,000 ரூபாயாக உயர்த்தி, வழங்கி வருகின்றோம் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் தேங்காய்ப் பட்டினத்திலும், குளச்சலிலும், மீன்பிடித் துறைமுகங்கள், 26 கோடி ரூபாய் செலவில் அமைப்ப தற்குத் திட்டம் ஒன்றைத் தயா ரித்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளோம். அத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, அப் பகுதி வாழ் மீனவப் பெருங்குடி மக்களின் தொழிலிலும், பொருளா தார வளர்ச்சியிலும், நிச்சயம் முன்னேற்றம் ஏற்படும்.

இறால் மீன் குஞ்சுகளின் உணவான, Artemia எனப்படும் உயிரினம் குறித்து, தகுந்த ஆராய்ச்சி மேற்கொண்டு, அதனை உற்பத்தி செய்து, இறால் உண வாகப் பயன்படுத்த, மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவாக, 8 கோடி ரூபாய் செலவில், Artemia

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், அமைக்க, இன்று அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பயிற்சி நிலையம், Artemia -வை உற்பத்தி செய்வதன் மூலம், இறால் உற்பத்தியும், இறால் ஏற்றுமதியும் பெருகி, மீனவர்களின் வாழ்க்கையில், ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.



இந்த மாவட்டத்தில், அரபிக் கடலை ஒட்டியுள்ள, கடற்கரைப் பகுதிகள், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டு வருவதும் அங்கு வசிக்கும் மீனவப் பெருங்குடி மக்களின், உயிருக்கும் உடைமைக்கும், பல சமயங்களில் ஆபத்து ஏற்படுவதையும், நான் நன்கு அறிவேன். அத்தகைய, 12 கரையோரக் கிராமங்களில், தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற, கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, 3 3/4 கோடி ரூபாய் மதிப்பில், ஒரு திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. முதல் கட்டமாக, மண்டைக்காடு புதூர் கிராமத்தில், 47 இலட்சம் ரூபாய் செலவில், 830 மீட்டர் நீளமுள்ள, கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு, இன்று நான் அடிக்கல் நாட்டி உள்ளேன். இம்மாவட்டத்தின் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பணியில், இது முதல் கட்ட முயற்சி ஆகும்.

ஒரு மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், அடிப்படைக் காரணமாக விளங்கும், போக்குவரத்து வசதியைக் கன்னியாகுமரி மாவட்டத்தின், மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள, 44 மீனவக் குக் கிராமங்களுக்கும், ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காகக் கீழ் மணக்குடிக்கும் மேல்மணக் குடிக்கும் இடையே, பழைய ஆற்றின் மீது ஒரு பாலமும் தேங்காய்ப் புட்டினத்தையும், இரையமன்துறையையும் இணைக்கும், தாமிரபரணி ஆற்றின் மீது, பாலம் ஒன்று கட்டுவதற்கும் மேற்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தில், வழி வகுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்காக நிதி ஆதாரத்தைத் திரட்டி, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, நிறைவேற்றும்போது, புதிதாக அமைக்கப்படும் சாலை, பாலங்கள், ஆகியவற்றால், சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும், ஒரு இலட்சம் பேர், பயன் பெறுவார்கள் என்பதை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தைப் பொருத்தவரையில், போக்குவரத்து முழுமையாகத் தேசியமயம் ஆக்கப்பட்டுள்ளது. தனியார் பேருந்துகளே இந்த மாவட்டத்தில் கிடையாது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், முப்பதுக்கும் மேற்பட்ட, புதிய பேருந்து வழித் தடங்களில், பேருந்துகளை இயக்கி உள்ளோம். அதேபோல இன்றும், 9 புதிய பேருந்து வழித் தடங்களை ஆரம்பித்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தில், தற்போதுள்ள 591 பேருந்துகளில், 140 பழைய பேருந்துகளை மாற்றி, 8 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில், 140 புதிய பேருந்துகள் பெறப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாவட்டத்தின் சாலைகளை மேம்படுத்துவதிலும், போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்துவதிலும், எங்கள் அரசு, ஒரு புதிய உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோதையாறு துணைத் திட்டத்தின் கீழ் உள்ள கால்வாய்கள், குளங்கள் மற்றும் கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைக்கவும், செம்மைப்படுத்தவும், 30 கோடி ரூபாய் செலவில், தேசிய நீர் ஆதாரங்கள் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ், திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் ஒப்புதலுக்கு, அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விரைவில் உலக வங்கியின் ஒப்புதலும், நிதி உதவியும் கிடைத்த பின்பு, இத்திட்டம் நிறைவேற்றப்படும். 2000 ஆம் ஆண்டில், இத்திட்டம் முடிவடையும் போது, இப்பகுதியின் பாசனத் தேவையை வெகுவாகப் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, கன்னியாகுமரி மாவட்டத்தில், அறிவொளி இயக்கம், சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு, இன்று அதன் முதல் கட்டம் முடிவுற்று, முழுமையான எழுத்தறிவு கல்வி பெற்ற மாவட்டமாக, அறிவிக்கப்படுகிறது. அறிவொளி இயக்கத்தின் 2 வது கட்டத்தை, இன்று துவக்கி வைத்து, இந்த மாபெரும் மக்கள் இயக்கத்தில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, பணியாற்றும் அனைவருக்கும், எனது நன்றியையும், பாராட்டுதல்களையும், தெரி

வித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்கு என அமைக்கப்பட்ட, அனைத்து மகளிர் காவல் நிலையத்தினை, நாகர்கோவிலில் இன்று மாலை, நான் திறந்துவைக்க உள்ளேன். ஏற்கெனவே, நான் பல முறை விளக்கிக் கூறியதைப் போன்று, எங்களது அரசால், ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டு வரும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், புதியதோர் மகளிர் முன்னேற்றச் சிந்தனையின் வெளிப்பாடு ஆகும். மாறி வரும் மகளிர் சமுதாயத்தின், புதிய தேவைகளை, ஈடுசெய்ய, உருவாக்கப்பட்ட, புரட்சிகரமான ஓர் அமைப்பு, இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' என்பதை, இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மகளிருடைய சமூகப், பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாயத்தில் அவர்களுக்குக் கிடைக்கின்ற பாதுகாப்பிற்கும், நெருங்கிய தொடர்பு உண்டு, என்று நான் கருதுகின்றேன். பாதுகாப்பு குறைந்துள்ள சமுதாயத்தில், மகளிர் முன்னேற்றத்தில், பின்னடைவு ஏற்படும்.

அதேசமயத்தில், பாதுகாப்புச் சூழ்நிலை, நிறையப் பெற்றுள்ள ஒரு சமுதாயத்தில், மகளிர் முன்னேற்றம் விரைந்து காணப்படும். இந்தக் கருத்தின் அடிப்படையில் தான், மகளிருக்கு இழைக்கப்படும் பல்வேறு சமுதாயக் கொடுமைகளிலிருந்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய, நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தரவேண்டும் தங்கள் பிரச்சினைகளை மனம் திறந்து விவாதிக்க, ஒரு சூழ்நிலை உருவாக்கித் தரவேண்டும் என்ற உயர்ந்த எண்ணங்களின் அடிப்படையில்தான், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் அமைத்து நானே சென்று திறந்து வைத்து வருகின்றேன். அந்த வகையில், இந்த மாவட்டத்தில் அமையவுள்ள, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, இந்த மாவட்டத்துப் பெண்கள், நல்ல முயற்சியில் பயன்படுத்தி தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டி பொருளாதார உரிமைகளைப் பெற்று சமுதாயத்தில் சரிநிகர் சமானமாக விளங்க வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைகளின் தோழராய், பாட்டாளிகளின் உரிமைக் குரல் எழுப்பி, தியாகத் தழும்புகளை ஏற்ற, சமதர்ம ஞானி, அமரர் ஜீவா அவர்கள் பிறந்த பூமி இது. பூதப்பாண்டியில் பிறந்த அந்தப் பெருமகனாரின், தன்னிகரற்ற சேவையை, உலகம் உணரும் வண்ணம், ஒரு நினைவகம் அமைக்க வேண்டும் என்று, இப்பகுதி வாழ் மக்கள், வெகு நாட்களாகக் கோரிக்கை கொடுத்து வருகிறார்கள், என்பதை நான் அறிவேன். இம்மாவட்ட மக்களின் மனம் குளிரும் வண்ணம், வெகு விரைவில், அமரர் ஜீவா அவர்களுக்கு, இந்த மாவட்டத்தில், ஒரு நினைவகம், (Memorial) தமிழக அரசின் சார்பில் அமைக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு அப்புநடேசன் அவர்கள் சற்று முன்பு பேசும்போது, இம்மாவட்டத்தில் ஓட்டு வீடுகளுக்கு வழங்கப்பட்டதைப் போல 1992-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கல்சுவர் கொண்ட ஓலை வீடுகளுக்கு மானியமும், கடன் உதவியும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். இந்த மாவட்ட மக்களின் நலன் கருதி 1992 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட கல்சுவர் அமைந்த ஓலைக் குடிசைகளுக்கு மானியமும், கடன் உதவியும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அரசு மானியம் 3,000 ரூபாயும், கடன் உதவி 6,000 ரூபாயும் வழங்க வேண்டும் என இதே விழா மேடையில் அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன். இந்த மானியமும், கடன் உதவியும் வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல மலையாள மொழி பேசும் தமிழ்நாட்டு மக்கள் பயன்பெறும் வண்ணம் மலையாளத்துப் புத்தகங்களை அச்சிட்டு இப்பகுதி மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை திரு அப்பு நடேசன் அவர்கள் என் முன் வைத்தார்கள். இந்த மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்குத் தேவையான மலையாளப் புத்தகங்கள் தமிழக அரசின் சார்பில் அச்சிட்டு வழங்கப்படும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தகங்கள் விரைவில் அச்சிடப்பட்டு வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா • சீரோடும், சிறப்போடும் நடைபெற, அனைத்து ஏற்பாடுகளையும், வெகு விமரிசையாக செய்துள்ள, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு கே. லாரன்ஸ் அவர்களுக்கும், அவருடன் இணைந்து பணியாற்றிய, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. •செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்களுக்கும், மற்றும் அரசு அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள் ஆகி

### சிறந்த வழி

கடவுளை அறிய உண்மை, அகிம்சை, அன்பு இம்மூன்றும் சிறந்த வழிகளாகும்.

-அண்ணல் காந்தியடிகள்


யோருக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்ற, 30,000-க்கும் மேற்பட்ட, எனது அன்பிற்குரிய மக்கள் ஒவ்வொருவருக்கும், நானே எனது கரங்களால், இந்த உதவிகளை நேரில் வழங்க வேண்டும், என்று மனதார விரும்பினாலும், நேரம் இன்மையின் காரணமாக, ஒரு சிலருக்கு மட்டும், இந்த மேடையில் வழங்க உள்ளேன். அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், மற்றவர்களுக்கு, அவர்கள் உட்கார்ந்து இருக்கின்ற இடத்திற்கே சென்று, எனது சார்பில், அரசு நலத்திட்ட உதவிகளை, நேரில் வழங்குவார்கள்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்கள், இந்த உதவிகளை, ஒரு அடிப்படையாக வைத்துக்கொண்டு, தங்களது உழைப்பு என்ற மூலதனத்தையும் செலுத்தி, வாழ்க்கையில் உயர்வையும், பொருளாதார முன்னேற்றத்தையும், அடையவேண்டும் என்று, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவை அனைத்திற்கும் மேலாக, என் மீது அளப்பரிய பாசத்தையும், நேசத்தையும், தங்களது நெஞ்சங்களில் தேக்கி, என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சினைக் கேட்பதற்காகவும், பெருந்திரளாக இங்கு கூடியிருக்கும், எனதருமை குமரி மாவட்ட மக்களுக்கும் நான் சென்ற இடம் எல்லாம், உணர்ச்சிப்பூர்வமான வரவேற்பினை நல்கிய, நல்ல இதயங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும், அன்பினையும் தெரிவித்துக் கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாபெரும் நம்பிக்கையை, என் மீது வைத்துள்ள, எனது அன்பிற்குரிய கன்னியாகுமரி மாவட்டத்து மக்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற வேண்டும், என்ற பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போக வேண்டும். இவை இரண்டும் போனாலன்றி நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலுந்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

அப்பாவியான ஏழை மக்களை வசதி படைத்தவர்களும், கல்மனம் படைத்தவர்களும் கசக்கிப் பிழிந்துவிடாதபடி தடுக்க வேண்டியது அவசியம்.

**பெருந்தலைவர் காமராஜ் பிறந்த நாள்: ஜூலை-15**





# எத்தனை இன்னல்கள், இடையூறுகள், நிதி நெருக்கடி இருப்பினும் தமிழக மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே நமது தலையாய கடமையாகும்!

## சேலம் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

கொங்கு பூமியின் ஒரு பகுதியான, மலைகள் நிறைந்த சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்து, இயற்கை அன்னை அளித்த வரப்பிரசாதங்கள் அனைத்தையும், தங்களது கடுமையான உழைப்பைக் கொண்டு, வளம் கொழிக்கும் செல்வங்களாக் மாற்றிவரும், இம்மாவட்டத்து மக்களின், எழுச்சி மிகுந்த, மலர்ந்த முகங்களைக் காணும்பொழுது நான் பேருவுவகையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

தொன்மையான வரலாற்றுச் சிறப்புடன், முற்போக்கான சிந்தனைகளின் உலைக்களமாக, விளங்கும் இந்த மாவட்டம், அனைத்துத் துறைகளிலும், மற்றவர்களுக்கு வழிகாட்டியாக, முன்னோடியாக இருந்து வந்துள்ளது. பண்டைய தமிழகம் ரோமாபுரியுடன் வர்த்தகம் நடத்தியபோது, இங்கே உள்ள கஞ்சமலைப் பகுதியிலும், சேந்தமங்கலம் பகுதியிலும் தயாரிக்கப்பட்ட இரும்பு ஆயுதங்களை, ரோமாபுரியைச் சேர்ந்தவர்கள் விரும்பி வாங்கிச் சென்றார்கள் என்பதையும், கிரேக்க நாட்டு மாவீரன் அலெக்சாண்டர், இங்கே நெய்யப்பட்ட, துணி வகைகளையும், தயாரிக்கப்பட்ட இரும்பு ஆயுதங்களையும் உபயோகிப்பதில் தனி ஆர்வத்தைக் காட்டினார் என்பதையும் சரித்திர ஆசிரியர்கள் வாயிலாக அறியும் போது, இம்மாவட்டத்துத் தொன்மைச் சிறப்பை நினைத்து மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தானுக்கும் இடையே நடந்த ஆதிக்கப் போராட்டத்தின் போது, இந்த மாவட்டம் ஒரு போர்க்களமாக மாறிவிட்டது. பின்னர் ஒரு காலத்தில் ஹைதர் அலியின் ஆதிக்கத்தின் கீழ் சேலம் மாவட்டம் முழுமையும் இருந்தது. அதன்பின் ஆங்கிலேயரின் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு தனக்கென்று சரித்திரச் சிறப்பையும் கலாச்சார பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டத்தில் என்னைக் கவர்ந்த வேறு ஒரு அம்சமும் உண்டு. சமுதாயத்தில், பெண்களுக்குச் சரிநிகர் இடத்தைக் கொடுத்து, உயரிய பண்பாட்டை, உலகிற்கு, தமிழ்நாடு பறைசாற்றிய இடம் என்பதால், இந்தத் திருச்செங்கோடு நகரத்தின் மீது, எனக்குத் தனி ஈடுபாடு உண்டு.

ஆணும், பெண்ணும் சமம், என்கின்ற உன்னதமான கோட்பாடும் சமமாகச் சேர்ந்து வாழ்வதே, உயர்ந்த வாழ்க்கை என்பதும் தமிழக மக்களின் மனத்தில், ஆழமாக பதிந்துள்ளன என்பதை வெளிப்படுத்த, இங்கே திருச்செங்கோட்டில் அருள்புரியும் சிவபெருமான், உமையவளுக்குத் தன்னில் சரிபாதியைக் கொடுத்துள்ளார். வாழ்விலும், வளத்திலும், பெண்களுக்குச் சமஉரிமை உண்டு என்பதை, ஆண்டாண்டுகளாக உணர்த்திக்கொண்டு வரும், புண்ணிய பூமி இது. அந்த வகையில் ஒரு காலத்தில், ஆணும் பெண்ணும் சமம் என்கிற த்தத்துவத்தை, உலகிற்கு எடுத்துக் காட்டிய அதே பூமி, பின்னொரு காலத்தில், பெண் குழந்தைகள் பிறப்பதே பாவம் அவர்கள் வீட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஒரு பாரம் என்கிற பிற்போக்கு எண்ணங்களால் உந்தப்பட்டு, பெண் குழந்தைகளை, இளம் பிராயத்திலேயே, அழித்துவிடுகின்ற ஒரு கொடிய பழக்கத்திற்கு, எவ்வாறு அடிமையானது, என்பதை எண்ணிப்பார்க்கும்போது, எனது மனம் வேதனை அடைந்தது.

21-ஆம் நூற்றாண்டில், அடியெடுத்து வைக்கும் நேரத்திலும், விஞ்ஞானத்தின் பல்வேறு கூறுகளில், அசுர வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கும், ஒரு காலகட்டத்திலும் இன்றும் பெண் சிசுக்களை அழிக்கின்ற, காட்டுமிராண்டித்தனமான, பத்தாம் பசலித்தனமான, கொடிய சமுதாயப் பழக்கத்திற்கு, எப்படியேனும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்ற எண்ணம், எனது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. பெண் சமுதாயத்தினர், அனைத்து உரிமைகளையும் பெற்று, ஆண்களுக்குச் சரி நிகர் சமானமாக வாழவேண்டும், என்கிற தமிழகத்தின் பாரம்பரியப் பண்பாட்டையும், பெருமைகளையும், கட்டிக் காப்பதற்காக உருவான திட்டம் தான், 'அரசு தொட்டில் குழந்தைகள் திட்டம்' வறுமையின் காரணத்தினாலும், பிற்போக்கு சிந்தனைகளாலும், பெண் குழந்தைகளை வெறுத்து ஒதுக்கும், தவறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பாரம் என்று கருதி, வளர்க்க விரும்பவில்லை என்றாலும் அவர்களை இந்த அரசே, தாய் உள்ளத்தோடு, அன்புடன் தத்து எடுத்து வளர்க்கின்ற, தொட்டில் குழந்தைகள் திட்டத்தை, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, 1992-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், சமுதாய முன்னேற்றத் திட்டமாக, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகின்றது.

*மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், **15.7.94** அன்று சேலம் மாவட்ட அரசு விழாவில், நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரையின் முழு விவரம்:*

இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட, 66 குழந்தைகள், பல்வேறு அரசு தொண்டு நிறுவனங்களில், நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அக்குழந்தைகள், கல்வி அறிவைப் பெறவும், பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பை பெறவும், அந்தக் குழந்தைகள் அனைவருக்கும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், அனைத்துச் சலுகைகளும் வழங்க, ஆணையிட்டுள்ளேன். அதுமட்டுமின்றி, இந்தக் குழந்தைகள் தொடர்ந்து, பேணிப் பாதுகாக்கப்பட்டு, உரிய வயதில் அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்து, அவர்கள் வாழ்க்கையில், ஒரு நல்ல நிலையை அடையச் செய்வதை எங்களது ஆத்மார்த்த சமுதாயக் கடமையாக, நாங்கள் கொண்டுள்ளோம்.

சேலம் மாவட்டத்தில், மக்கள்தொகைக் கணக்குப்படி, ஆண்களைவிட, பெண்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதைப் பலர் வருத்தத்துடன், என்னிடம் சுட்டிக்காட்டி உள்ளார்கள். ஆனால், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு, இந்தச் சூழ்நிலையை மாற்றி வருகிறது. நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள், சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. ஒரு புதிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கி உள்ளது. இம் மாவட்டத்தில், பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம், இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கிய பின்பு, குறைந்துள்ளதைக் காணும் போது, உண்மையில் என் மனம் மகிழ்ச்சி அடைகிறது. 1992-ஆம் ஆண்டு, 3,578 என்ற அளவில், இருந்த குழந்தைகளின் மரணம் 1993-ஆம் ஆண்டில், 2,541 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது என்பதை ஒப்பிட்டு நோக்கும் போது எங்களது முயற்சிகள், ஒரு புதிய விழிப்புணர்ச்சியையும், தாக்கத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றன என்று, நான் உறுதியாக நம்புகின்றேன். பெண் குழந்தைகளின் சமுதாய வாழ்க்கை, சீர் பெற வேண்டும் என்பதற்காக, நாங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும், எனக்கு ஒரு மன நிறைவைத் தருகின்றன, என்பதைத் தெரிவிப்பதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்'கீழ், 1992-93-ஆம் ஆண்டில், 750 பயனாளிகளும், 1993-94-ஆம் ஆண்டில் 6136 பயனாளிகளும் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர். இந்த நிதி ஆண்டில், முதல் மூன்று மாதங்களில் மட்டும், 3696 பேர், சேர்க்கப் பட்டுள்ளனர். இந்த ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த, 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தமிழ்நாட்டில் என்றென்றும் தொடருவதற்கு, நாங்கள் உறுதி பூண்டு உள்ளோம் என்பதை, நாகர்கோயிலில் நடைபெற்ற அரசு விழாவில், நான் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டு இருந்தேன். இருப்பினும், சில அரசியல் கட்சிகள், தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாமல், தொடர்ந்து தேவையற்ற அறிக்கைகளை விட்டுக் கொண்டும், போராட்டத்தை நடத்திக் கொண்டும், இந்தப் பிரச்சினையை அரசியலாக்கிக் கொண்டு வருகின்றன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூக நீதியைப் பெற்றுத் தருவதற்காக, இந்த அரசும், இந்த அரசை வழிநடத்திச் செல்லுகின்ற, உங்கள் அன்புச் சகோதரியாகிய நானும், மேற்கொண்டு வருகின்ற எல்லா நடவடிக்கைகளையும், பல முறை விவரமாக விளக்கி இருக்கிறேன். எனவே, அவற்றை எல்லாம், மீண்டும் இந்த இடத்தில், எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை, என்று கருதுகிறேன்.

திராவிடப் பாரம்பரியத்தில் வந்த நாங்கள், பிரச்சினைகளை கண்டு ஓடி ஒளிபவர்கள் அல்ல. துணிவுடன் பிரச்சினையை எதிர்கொண்டு, விவேகத்துடன் அணுகி, அவற்றைத் தீர்த்து வைக்கும் நெஞ்சுரமும், உறுதியும் படைத்தவர்கள் நாங்கள். ஆனால், சில அரசியல் கட்சித் தலைவர்கள், இந்த உயிர் மூச்சுப் பிரச்சினைக்கு, ஒரு தீர்வு காண்பதை விட்டுவிட்டு, இதில் அரசியல் குளிர்காயும் செயல்களில், ஈடுபட்டு வருகிறார்களே அது ஏன்? என்பதுதான், என்னுடைய உள்ளார்ந்த வேதனையாகும்.

ஒருபுறம் அறிக்கை விடுகிறார்கள்; இன்னொருபுறம் விதவிதமான போராட்டங்களை நடத்துகிறார்கள் - அல்லது நடத்தத் தூண்டுகிறார்கள். சிலர் இந்தியப் பிரதமருக்கும், அகில இந்தியக் கட்சித் தலைவர்களுக்கும், கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள்



நலம் அல்ல. ஆனால், இந்த விவகாரத்தை அரசியல் ஆக்கி, ஆதாயம் தேடும் எண்ணம், எங்களுக்குச் சற்றும் இல்லை. தமிழக மக்களுக்குச், சமூக நீதியைப் பெற்றுத் தருகின்ற, ஒரு 'சோதனை வேள்வி'யாகத் தான், நாங்கள் இந்தப் பிரச்சினையை அணுகி, ஒரு ஆத்மார்த்த ஈடு பாட்டுடன், செயல்பட்டு வரு கிறோம்.

அண்டை மாநிலமான கர்நாட கத்திலே கூட, அரசியல் நடக்கின்றது. அங்கேயும் அரசியல் கட்சிகள் இருக்கின்றன; அவர் களிடமும் மனமாச்சரியங்கள் இருக்கின்றன; கொள்கை வேறு பாடுகள் இருக்கின்றன; அங்கே யும் தான் முதலமைச்சரைக் குறை கூறுகிறார்கள். ஆனால் 'காவிரிப் பிரச்சினை' என்ற, ஒரு பொதுப் பிரச்சினை வந்துவிட்டால், அவர்கள் அனைவரும் ஒன்றாக, ஓரணியில் திரண்டு விடுகிறார் களே! இட ஒதுக்கீட்டுப் பிரச் சினை என்றால், எல்லோரும் ஒன்று சேர்ந்து ஓரணியில் நிற்கிறார்களே! கர்நாடகத்தில் முதல் அமைச்சர், இட ஒதுக் கீட்டுப் பிரச்சினையில் எடுக்கும் அத்தனை நடவடிக்கைகளுக்கும், அங்கே அனைத்துக் கட்சியின ரும், இட ஒதுக்கீட்டை எதிர்த்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வில்லை. அப்படி என்றால், அங்கே இருக்கின்ற அரசியல் வாதிகள் மட்டும்தான், மக்கள் நலனில் அக்கறை கொண்ட வர்கள், என்றுதானே எண்ணத் தோன்றும்? தங்களது அரசியல் ஆதாயத்தைவிட, நாட்டு மக்களின் பொது நலன்தான் முக்கியம், என்று கருதுகின்ற நாகரீகமும், பண்பாடும், அங்கே மட்டும் இருக் கிறது; ஆனால், இங்கே இல்லை, என்றுதானே கருதவேண்டி யுள்ளது?

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, உயிரைக் கொடுப்பேன் செத்து மடிவேன் என்று மக்கள் மத்தியில், ஆவேசமாகச் சிலர் வீர வசனம் பேசுகிறார்கள். ஆனால், இவர் களது பேச்சுக்கும், செயலுக்கும், எந்தத் தொடர்பும் இல்லை. உயிரைத் தருவேன் என்று, ஒரு

இதுவரை சொல்லிக் கொண்டு வந்ததைத்தானே இவர்கள் இப்போது சொல்கிறார்கள்? அறிக்கை விடுகிறார்கள்? கடிதம் எழுதுகிறார்கள்? இவர்கள் புதி தாக ஒன்றையும் கூறிவிடவில் லையே? எல்லாமே ஏற்கெனவே நாங்கள் சொல்லிக் கொண்டு இருப்பவை தானே? இப்படி இருக்குப்போது, எதற்காக இந்தத் தேவையற்ற கூப்பாடு? பகல் வேஷம்?

பொது நலன்தான் முக்கியம், என்று கருதியிருந்தால் இந்தப் பிரச்சினைக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும், என்று நினைத் திருந்தால் எல்லா நடவடிக்கை களையும் எடுத்து வருகின்ற எங்களுடன் சேர்ந்து, ஓரணியில் நின்று, உரிமைக் குரல் கொடுத்து இருக்க வேண்டாமா? நமது நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுத்து, நமது கரங்களைப் பலப்படுத்தி இருக்க வேண் டாமா? அதை விட்டுவிட்டு, எங்களைத் தாக்கி அறிக்கைகளை விட்டுக்கொண்டும் எங்களுக்கு எதிராகப் போராட்டங்களைத் தூண்டி விட்டும் சட்டம் ஒழுங் கைக் குலைக்க வழி வகுத்து இந்தப் பிரச்சினையைத் திசை திருப்பி அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதால் தமிழக மக்களுக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? மாணவ, மாணவி யர்களின் எதிர்காலத்தை, நிச்சய மாக இதுபோன்ற செயல்களால், காப்பாற்றி விடமுடியாது என்பது தான் உறுதி.

டெல்லிக்குச் சென்று, அங்கே யும் மறியல் செய்கிறார்கள் சிலர். அங்கே கைது செய்யப்படும்போது, முக்கனியை உண்ட பேரானந்தத் தைத் தருகின்றது, என்று பரவசம் அடையும் இவர்களுக்கு இங்கே நமது மாநிலத்தில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட, சிலரைக் கைது செய்தால், அதுமட்டும் எட்டிக் காயாகக் கசப்பது ஏன்? டெல்லியிலே இவர்களைக் கைது செய்தால், அங்கே காவல் துறையினருக்குப் பாராட்டு தெரி விக்கிறார்கள். அதையே தமிழ் நாட்டில் செய்தால், இது அடக்கு முறை சர்வாதிகாரம்; எவ்வாறு எங்களைக் கைது செய்யலாம் என, வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கிறார்களே? அது ஏன்? ஆக, குறுகிய அரசியல் லாபம் தான் இவர்கள் மனதில் முன் நிற் கின்றதே தவிர, பிரச்சினைக்குத் தீர்வு காணும் உண்மையான எண்ணம் அல்ல, என்பது தெளிவாகிறது. இவர்களது சுய நலம்தான், இவர்கள் இப்படி யெல்லாம் நடக்க உந்துதலாக அமைந்துள்ளதே தவிர, ஒட்டு மொத்த தமிழக மக்களின் பொது

புறம் வசனம் பேசுகிறவர்கள் மறைமுகமாக வேறு சிலரை வைத்து, நீதிமன்றத்திலே, தேவை யற்ற முறையில், வழக்குகளைத் தொடுத்து தடை ஆணைகளைப் பெற்று பிரச்சினையைப் பெரி தாக்கி, மகிழ்ச் அடைகிறார்களே? பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டி விடுவது போல, சிலர் நம் மாநிலத்தில் செயல்படுகிறார்களே? இத்தகைய கீழ்த்தரமான அரசியல் நடத்து கிறார்களே? இது தமிழ்நாட்டின் துரதிருஷ்டம், என்பதுதான் எனது கருத்து.

வேறு சிலர், அரசியல் லாபம் கருதி, மாணவ மாணவியர்களின் மத்தியில், போராட்டத்தைத் துண்டிவிட வேண்டும் என்று, பகிரங்கப் பிரயத்தனம் செய் தார்கள். ஒரு தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை, 'வாயில் கூட்டம்' அதாவது, Gate Meeting என்று ஒரு கூட்டத்தைக் கூட்டி, விவாதிக்கின்ற ஜனநாயக நடை முறை, பலகாலமாக இங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் சிலர், இடஒதுக்கீட்டுப் பிரச்சினை பற்றி விவாதிக்க, கல்வி நிறுவனங்களின் முன்பு, இந்த வாயில் கூட்டம் Gate Meeting நடத்தி, ஒரு தவறான முன் உதார ணத்தை ஏற்படுத்த முனைந் தார்கள். நம்மால் நல்லவை செய்ய முடியவில்லை என்றாலும், தீயவை செய்யாமலாவது, விலகி இருப்பது நல்லது என்று, வள் ளுவப் பெருந்தகை குறிப்பிட் டதை, இந்த இடத்தில் நினைவு கூர்வது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கல்வி நிறு வனங்களின் முன்பு, வாயில் கூட்டம் நடத்துவது என்பது, அங்கேயும் அரசியலை நுழைப் பதற்கும், வன்முறையைத் தூண்டி விடுவதற்கும் தான், வழி வகுக்கும் என்பதை, அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். இந்தப் பிரச்சி னைக்கு, இதன் மூலமாகத், தீர்வு காண முடியாது என்றும் சிலரது சதி வேலைகளால், தமிழக மாணவ, மாணவியர்களின், ஒளி மயமான எதிர்கால வாழ்க்கை, பாதிக்கப்படும் என்பதையும் அனைவரும் அறிவார்கள். ஆனால் என் அன்பிற்குரிய தமிழ கத்து மாணவ, மாணவிகள், சதி காரர்களின் சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொள்ளாமல், "நாங்கள் புத்திசாலிகள் தீயவர்களின் கைப் பாவைகள் ஆகிவிடமாட் டோம்", என்று உணர்த்திவிட்டார்கள். தங்கள் வருங்காலத்தை, வீணர் களின் கையில் சிக்கி வீணடித்துக் கொள்ளக்கூடாது, என்பதைப் புரிந்து கொண்டு விட்டார்கள். 12-ஆம் தேதியன்று, கல்வி நிறுவனங்களின் முன் Gate Meeting நடத்த வேண்டும் என்று, சில அரசியல் கட்சிகள் அறைகூவல் விடுத்திருந்தன. ஆனால், ஒரு கல்லூரியில் கூட, இந்த வாயில் கூட்டம், நடைபெறவில்லை என்ப திலிருந்து, தமிழகத்து மாணவ, மாணவிகள் எவ்வளவு புத்தி சாலிகள் என்பதை, வாயில் கூட் டங்கள் நடக்கும் என்று எதிர் பார்த்து, ஏமாந்து போன அரசியல் கட்சித் தலைவர்கள், உணர்ந்து கொள்ளவேண்டும். பொறுப்புணர்ச்சியுடனும், புத்தி சாலித்தனத்துடனும் செயல்பட்ட, எனது அன்பிற்குரிய தமிழக மாணவ, மாணவியர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும், தெரி வித்துக் கொள்கிறேன். உங்கள் எதிர்கால வாழ்க்கை ஒளிமய மாகவும், சிறப்பாகவும் அமை வதற்கு, நான் உத்தரவாதம் தரு கிறேன். உங்கள் நலன்காக்க, இந்தப் பிரச்சினைக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காணாமல், ஓய மாட்டோம் என்பதை, மீண்டும் உறுதியாக தெரிவித்துக் கொள் கிறேன்.

நேற்றைய முன்தினம், 13-ந் தேதியன்று, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்கள், என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். அன்று காலை, டெல்லியில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தி, அவர்களின் கருத்துக் களைக் கேட்டு அறிந்ததைப் பற்றி, குறிப்பிட்டார்கள். தமிழக மக்கள் அனைவரும், மகிழ்ச்சி பெறும் வண்ணம், நாம் மத்திய அரசிற்கு



அனுப்பிவைத்த, இட ஒதுக்கீடு சட்டத்திற்கு, குடியரசுத் தலை வரின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதற்கு, மத்திய அரசு பரிந் துரை செய்ய முடிவு எடுத்துள்ளது, என்ற நல்ல செய்தியை, எனக்குத் தெரிவித்தார்கள். இட ஒதுக் கீட்டுப் பிரச்சினை தொடர்பாக, மாறுபட்ட கருத்துக்களோ, தவ றாகப் புரிந்துகொள்ளும் மனப் பாங்கோ, யாருக்கும் இருக்க வேண்டாம் என்று, என்னிடம் கேட்டுக் கொண்டார்கள்.

மத்திய அரசின் இந்த முடிவு, சமூக நீதியைப் பெற்றுத் தருவ தற்காக, உங்கள் சகோதரி நடத் திய, ஒரு மாபெரும் 'சத்திய வேள்விக்குக் கிடைத்த மகத்தான வெற்றி, நமது கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை, உலகிற்கு உணர்த்துகின்ற ஒரு ஆரம்பம் இது. முட்டுக்கட்டைகள் விலகிப் போகும், என்பதற்கான ஒரு அறி குறி இது. ஆரம்பத்தில் இருந்து, இந்த அரசும், இந்த அரசை நடத்திச் செல்கின்ற, உங்கள் அன்புச் சகோதரியும், எடுத்த எல்லா நடவடிக்கைகளுக்கும், உங்கள் பேராதரவும், பேரன்பும் இருந்ததால் தான், இத்தனை இடர்ப்பாடுகளையும், சோதனை களையும், என்னால் தாங்கிக்

கொள்ள முடிந்தது. இந்த முதல் கட்ட வெற்றி, நாம் சரியான திசையை நோக்கி, வெற்றிப் பயணம் செய்துகொண்டு இருக்கிறோம் என்ற உணர்வை, நமது உள்ளங்களிலே ஏற்படுத்தி இருக்கின்றது. எனது கோரிக்கைகளை ஏற்று, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண, நடவடிக்கைகளை எடுத்து வரும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களுக்கும், அவரது உத்தரவின் பேரில், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்திய, மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்களுக்கும், எனது சார்பிலும், உங்கள் அனைவரின் சார்பிலும், மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மேலும், மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம், நான் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று, கொடுத்த கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று, தமிழக மக்கள் சார்பாகப், பொதுநல நோக்குடன், நல்ல கருத்துக்களை முன்மொழிந்த, அகில இந்தியக் கட்சித் தலைவர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


தமிழகச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, அனுப்பிவைத்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவது என்பது, நமது முதல் கட்ட நோக்கம் ஆகும். அதைத் தொடர்ந்து, இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 31 B-ன்படி இந்தச் சட்டத்தை, 9 வது அட்டவணையில் சேர்ப்பதற்கும், இச்சட்டத்திற்குத் தகுந்த பாதுகாப்பைக் கொடுக்கவும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று, நான் மத்திய அரசையும், அகில இந்திய அரசியல் கட்சித் தலைவர்களையும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று, ஒவ்வொரு மாநிலமும், அந்த மாநிலத்தில் நிலவும் பல்வேறு சூழ்நிலைகளையும், அவசியத்தையும் பொருத்து, சுயமாகத் தாங்களே நிர்ணயம் செய்து கொள்கின்ற ஓர் உரிமையைப் பெற்றுத் தருவதற்கு, மத்திய அரசு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று, ஒரு தொலைநோக்குப் பார்வையுடன், கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இந்த முறையும், நான் 351 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களோடு, உங்களைச் சந்திக்க வந்துள்ளேன். 97 கோடி ரூபாய் மதிப்பில், இன்று பல திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன். 227 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டங்களுக்குச் சற்றுமுன், அடிக்கல் நாட்டியுள்ளேன். இதே விழா மேடையில், இம்மாவட்டத்தைச் சேர்ந்த நலிந்த பிரிவினர், 54,000 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு, 27 கோடி ரூபாய் மதிப்பில், அரசு நலத்திட்ட உதவிகளை, வழங்க உள்ளேன் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை, மதுரை மற்றும் சேலம், ஆகிய 3 மாநகரங்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும் கூடுதல் குடிநீர் வசதியைச் செய்து தருவதற்காகவும் 85 நடுத்தர மற்றும் சிறிய நகரங்களுக்கும், 966 வழியோரக் கிராமங்களுக்கும், குடிநீர் வசதியைப் பெற்றுத் தருவதற்கும் உலக வங்கியின் உதவியுடன், 322 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

எங்களுக்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தாமல், கிடப்பில் போட்டுவிட்ட காரணத்தால், உலக வங்கி, தன் உதவியை நிறுத்திக் கொள்கிற அளவிற்குப் போய்விட்டது.

ஆனால், உங்கள் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, உங்கள் அரசு, அந்தத் திட்டத்தை முனைப்புடன், மீண்டும் செயல்படுத்த தொடங்கியதைக் கண்டவுடன் உலக வங்கி, தனது பாராட்டுதல்களைத் தெரிவித்ததோடு, இத்திட்டத்தை நிறைவேற்ற, 31.12.1994 வரை, கால அவகாசத்தை நீட்டிப்புச் செய்து கொண்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே, முதன் முறையாக, உலக வங்கி, இந்த கால நீட்டிப்பினைச் செய்து கொடுத்துள்ளது. வேறு சில மாநி




லங்களில் பணி முன்னேற்றம் இல்லை, என்கின்ற காரணத்தைக்காட்டி, தனது நிதி உதவியை, நிறுத்திக் கொண்ட உலக வங்கி இங்கே, தமிழ்நாட்டில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு திட்டத்தை, நான் மீண்டும் முனைப்புடன் துரிதமாகச் செயல்படுத்தி வரும் விதத்தைப் பாராட்டி முதன்முறையாக, கால நீட்டிப்பு செய்து கொடுத்துள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ்தான், சேலம் மாவட்ட வாழ் மக்களின், குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, சேலம் - ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1985 இல் துவக்கப்பட்டது. சேலம் மாநகராட்சி, 11 நகரங்கள், மற்றும் 264 வழியோரக் கிராமங்கள் பயன் பெறும் வண்ணம், அமைக்கப்பட்ட இத்திட்டம், முதன்முதலில் உலக வங்கியின் நிதி உதவியுடன், 50 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. ஆறு ஆண்டுகளில், பணி, ஆமை வேகத்தில் நடைபெற்றது. 1985 முதல் 1991 வரை, ஆறு ஆண்டுகளில், இத்திட்டத்தைச் செயல்படுத்த, 24 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால், உங்கள் சகோதரியின் தலைமையில், அமைந்த இந்த அரசு, மூன்றே ஆண்டுகளில், 30 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டு, இத்திட்டத்தை முடித்துவைத்துள்ளது.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து, நாளொன்றுக்கு, 88 மில்லியன் லிட்டர் தண்ணீரைப் பெற்று விஞ்ஞான ரீதியில், சுத்திகரிப்பு செய்து 90 கிலோ மீட்டர் தூரம் வரை, குழாய்கள் மூலம், சேலம் மாநகராட்சி உட்பட, பல நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், குடிநீர் வழங்கும், 60 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தக் கூட்டு குடிநீர்த்திட்டத்தை, இம்மாவட்டத்து மக்களுக்கு, இன்று அர்ப்பணித்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டக் குடிநீர்த் திட்டங்களையும், இதே வேகத்தில் செயல்படுத்தி, எப்படியேனும், இவ்வாண்டு இறுதிக்குள் முடித்துவைக்க, அனைத்து நடவடிக்கைகளையும், நாங்கள் மேற்கொள்வோம் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று ஒரு கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்டுள்ள, 28 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைத் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்பதில், நாங்கள் ஒரு உண்மையான ஈடுபாட்டுடன், செயல்பட்டு வருகின்றோம். இன்னல்கள், இடையூறுகள், நிதி நெருக்கடி, எத்தனை இருப்பினும் நாங்கள் இந்தக் கொள்கையில், உறுதியுடன் இருக்கிறோம் என்பதன் வெளிப்பாடுதான், ஒரே நேரத்தில் இன்று, என்னால் திறந்து வைக்கப்பட்ட, 28 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள். அதே போல, மேலும் 19 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை, ஒரு கோடியே, 13 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கு, இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். 58 கிராமக் குடிநீர்த் திட்டங்களை, 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தவும் கனியனூர் திட்டத்தை 19 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தவும் இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

DANIDA நிதி உதவியுடன், 50 சுகாதாரத் துணை மையக் கட்டடங்களைத் திறந்து வைத்ததிலும், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்கின்ற கொள்கையின் அடிப்படையில், இன்று சேலம் மாவட்டத்தில், 8 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில், நாமக்கல், தத்தம்பட்டி, ஐயம் பெருமாள்பட்டி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள 836 குடியிருப்புக்களைத் திறந்து வைத்ததிலும் நாமக்கல், வகுரம்பட்டி, சந்தம்பட்டி, அன்னதானப்பட்டி ஆகிய பகுதிகளில், 1075 குடியிருப்புகளையும், வீடுகளையும், 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நெசவாளர்களின் நலன் காக்க, நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்திவருகின்ற எங்கள் அரசு, சேலம் மாவட்டத்தில், ஒரு முன்னோடித் திட்டமாக, நெசவாளர்களுக்காக, 25 குடியிருப்பு வீடுகள்

கட்டி முடித்துள்ளது. இந்தக் குடியிருப்புகளை, இன்று நெசவாளர்களுக்கு அர்ப்பணிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தில் கூடுதலாக, 20 புதிய பேருந்து வழித் தடங்களைத் தொடங்கிவைத்ததிலும், அண்ணா போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த, 809 பேருந்துகளில், 115 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, 9 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில், 115 புதிய பேருந்துகளை வழங்கியதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைக்கும், அகில இந்திய அளவில், மிகக் குறைவான கட்டணத்தை வசூலித்து, திறமையுடன் செயல்படும் போக்குவரத்துக் கழகங்கள், நமது மாநிலத்தில்தான் உள்ளன, என்பதை எண்ணிப் பார்க்கும் போது மனம் மகிழ்ச்சி அடைகின்றது.



தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான, மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு, புதிய ஈடுபாட்டுடன், செயல்பட்டு வரும் எங்கள் அரசு, 20 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில், மேலும் 7 புதிய துணை மின் நிலையங்களை, இம்மாவட்டத்தில் அமைக்க உள்ளது.

மல்லூர், நாமகிரிப்பேட்டை, தும்பல், பள்ளிப்பாளையம், இளநகர், கபிலர்மலை, கொளத்தூர் ஆகிய 7 இடங்களில், இந்தத் துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியதிலும் வலையப்பட்டியில், 3 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்ட துணை மின் நிலையத்தைத் திறந்து வைத்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் துணை மின் நிலையங்கள் செயல்படும் போது, இந்த மாவட்டத்திற்குக் கூடுதல் மின் இணைப்புகள் வழங்க, வழிவகை செய்யப்படும் நிலையான மற்றும் உறுதியான மின் சக்தியை, இம்மாவட்டத்து மக்கள் பெறுவார்கள் என்பதிலும் இம்மாவட்டத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கு, இந்தக் கூடுதல் மின் இணைப்புகள், உதவியாக அமையும் என்பதிலும், ஐயமில்லை.

தேனிரும்புத் தொழிற்சாலை ஒன்றினை, SISCOL - Southern Iron and Steel Company Limited நிறுவனத்தின் மூலமாக 194 கோடி ரூபாய் மதிப்பில் TIDCO நிறுவனத்தின் கூட்டுத்துறையில் நிறுவுவதற்காக, நான் சென்ற முறை 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் அடிக்கல் நாட்டினேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த 200 ஏக்கர் நிலம், ஏற்கெனவே நில எடுப்புச் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியை விரைவில் தொடங்க அனைத்து ஆயத்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும், 1995-ஆம் ஆண்டு இந்த நிறுவனம் தனது உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், SISCOL நிறுவனம் 256 கோடி ரூபாய் மதிப்பில், எஃகு இரும்பு உருக்கு மற்றும் உருட்டாலை ஒன்று அமைப்பதற்கும், நிலக்கரியிலிருந்து கல்கரியை, அதாவது COKE தயாரிக்கும் திட்டத்தை 160 கோடி ரூபாய் செலவிலும், செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

160 கோடி ரூபாய் மதிப்பில் COKE தயாரிக்கும் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த பீகாரிலிருந்து தேவையான நிலக்கரியைப் பெறுவதற்கு, நாம் மத்திய அரசின் அனுமதியை, ஏற்கெனவே பெற்றுள்ளோம். இத்திட்டத்திற்கென, 165 ஏக்கர் நிலம், விரைவில் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 3 வருட காலக் கட்டத்தில், இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும், பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனிரும்புத் தொழிற்சாலைக்குத், தேவையான கல்கரி எனும் COKEஐ, தற்போது நாம் வெளிநாடுகளிலிருந்து, இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். இன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட, இந்தத் திட்டத்தின் கீழ், இந்தத் தேனிரும்பு தொழிற்சாலைக்குத், தேவையான COKE மட்டுமின்றி, உபரியானது, தேனிரும்பை, வார்ப்பு இரும்பாக மாற்றும் FOUNDRY களுக்கும், மற்றவர்களுக்கும் வழங்கப்படும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்திற்குத் தேவையான கல்கரியில், தன்னிறைவைக் காணுகின்ற ஒரு வாய்ப்பை, இந்தத் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.


மேலும், கல்கரி தயாரிக்கப் படும்போது, உபரியாகக் கிடைக் கின்ற நிலக்கரி வாயு, COALGASஐ வைத்து, 10 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு, இந்த மூன்று தொழிற் சாலைகளும், செயல்படும்போது, ஆயிரக்கணக்கானோருக்கு, நேரடி வேலைவாய்ப்பும், மறைமுக வேலைவாய்ப்பும், கிடைக்கும் என்பதை எண்ணி மன நிறைவு அடைகிறேன்.

சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகத் தன்னை அர்ப் பணித்துக் கொண்டுள்ள உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள, உங்கள் அரசு, கிராமப்புறங்களில் வாழ்கின்ற, ஏழை எளிய மக்களும், மருத்துவ வசதியையும், மருந்துகளையும் பெற, மருத்துவ நல முகாம்களை நடத்தி வருகின்றது. பணம் படைத்தவர்களுக்கு மட்டும் தான், நவீன மருத்துவ வசதியும், உயிர்காக்கும் மருந்துகளும் கிடைக்கும், என்ற சூழ்நிலையை மாற்றி கிராமப்புறங்களில் வாழும், ஏழை எளிய பாமர மக்களுக்கும், அனைத்து மருத்துவ வசதிகளும், மருந்துகளும், அவர்கள் தங்கி யிருக்கின்ற இடத்திற்கே, சென்று அடையச் செய்ய வேண்டும், என்கின்ற ஒரு எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்த மருத்துவ முகாம்களை, எங்கள் அரசு, உங்கள் அரசு, தொடர்ந்து நடத்தி வருகின்றது.

இந்தியாவின் எதிர்காலச் சிற்பி களாம், தமிழகத்தின் பள்ளிக் குழந்தைகளின் உடல் நலமும், மன நலமும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, மாநில அளவிலான, 'பள்ளி மாணவ மாணவியர் மருத்துவ முகாமை', சற்று முன்பு தொடங்கி வைத்த தில், நான் பெரு மகிழ்ச்சி அடை கின்றேன். 5 வயதிலிருந்து 15 வயதிற்கு உட்பட்ட, ஒரு கோடியே 34 இலட்சம், பள்ளிச் சிறார்கள், இத்திட்டத்தினால் பயன்பெறு வார்கள். உடல் நலம் மட்டுமின்றி, குழந்தைகள் மன நலமும், முதன் முறையாக இந்தத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சை, இலவசமாக வழங்கப்படும் என் பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

நமது எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களான பள்ளி மாணவ மாணவியர்கள், நல்ல கல்வி கற்பதோடு, சத்தான உணவையும், உட்கொண்டு, நல்ல உடல் நலத் துடனும், மனநலத்துடனும், நாட் டிற்கும், வீட்டிற்கும் பயன் படுகின்ற, சிறந்த குடிமக்களாக உருவாக வேண்டும், என்ற எனது



பேரவாவினை, இத்தகைய மருத்துவ முகாம்கள் நிறைவேற்றும் என்பதில், எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இந்தத் திட் டத்தை நிறைவேற்றுவதற்காக, ஆரம்பச் சுகாதார மையங்கள் ஒவ்வொன்றிற்கும், மருந்துகள் வழங்குவதற்காகத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, உடல் நலம் குறித்தும், மன நலம் குறித்தும், ஒரு புதிய விழிப்புணர்ச்சியை, அவர்கள் மனங்களிலே ஏற்படுத்தி வைப்பதற்காக, 'பள்ளி மாணவ மாணவியர்கள் நல்வாழ்வு வாரம்' ஒன்றை, எல்லா பள்ளிகளிலும் நடத்துவதற்கும், ஏற்பாடு செய்யப் படும் என்பதைப் பெருமகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டதொரு பாரம்பரியத் தையும், பண்பாட்டு வரலாற்றை யும், தன்னகத்தே கொண்டு விளங்கும் தமிழ்ச் சமுதாயம், மீண்டும் ஏற்றம்பெற வேண்டும் என்றால், தமிழக மகளிருக்குச் சங்க காலத்திலும், அதற்குப் பின்பும், சமுதாயத்தில் வழங்கப் பட்டு வந்த, சரி நிகர் சமான இடத்தை, வழங்க வேண்டும் என்பதிலும் இன்றைய சூழ்நிலை யில், பொருளாதார ஆதரவுக்காக, யாரையும் சாராமல், தன்னிச்சை யாகச் செயல்படுகின்ற ஒரு சூழ்நிலை, பெண்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதிலும் எனக்குத் தீவிரமான ஈடுபாடு உண்டு. அதே நேரத்தில், நமது கலாச்சாரத்தின் ஆணி வேரான, அன்பும் பாசமும் நிறைந்த, குடும்பச் சூழ்நிலை மாசுபடாமல், பெண்களின் முன்னேற்றம் தொடர வேண்டும் என்பதிலும், நான் தீவிரமாக இருக்கிறேன்.

பெண்களின் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கு, வழி வகை காணவேண்டும் என்கின்ற, எனது ஈடுபாட்டின் வெளிப்பாடு தான், மாவட்டந்தோறும், நானே நேரில் சென்று திறந்து வைக்கும், 'அனைத்து மகளிர் காவல்

நிலையங்கள்'. சட்டப்படி'மகளிருக் குப் பாதுகாப்பு கிடைக்கவும், வரதட்சணை போன்ற சமுதாயக் கொடுமைகளிலிருந்து அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வ தற்கும், மனம் திறந்து தங்களது பிரச்சினைகளைப் பேசித் தீர்வு காண்பதற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' உதவியாக இருக்கும் என்று, நான் பூரணமாக நம்புகிறேன்.

இன்று பிற்பகல், சேலம் மாவட்டத்திற்கான, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, சேலம் நகரில் திறந்து வைக்க உள்ளேன். இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தில்' பணிபுரியும் ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும், பெண் காவலர் களும், உதவி நாடி வருபவர்களை, மனுதாரர்கள் என்று கருதாமல், தங்கள் உடன் பிறவாச் சகோதரி களாக நினைத்து, அவர்களது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கண்டு அவர்கள் நல்வாழ்விற்கு, வழி வகுக்க வேண்டும் என்பதே, எனது பேரவா. எனது எதிர் பார்ப்புகளுக்கு ஏற்றாற்போல், அவர்கள் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். மேலும், சேலம் மாவட்டப் பெண்கள், இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தை' நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிலப்பதிகாரக் காவிய நாயகி, பத்தினித் தெய்வம் கண்ணகிக்கு சிறப்பு செய்யும் வண்ணம், திருச்செங்கோட்டில், "கண்ணகிக் கோட்டம்" ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம், இப் பகுதி வாழ் மக்கள் மனதில், பல காலமாக இருப்பதை, நான் நன்கு அறிவேன். மக்கள் எண்ணம் அறிந்து செயல்படுவதில், உங்கள் சகோதரியின் அரசுக்கு, எப் போதும் ஒரு தனி ஈடுபாடு உண்டு. திருச்செங்கோடு நகரத்தில், ஒவ்வொரு ஆண்டும், கண்ணகிக்கு விழா எடுக்கும், தமிழ் உணர்வு படைத்த மக்கள், அனைவரின் விருப்பத்தின்படி, தமிழக அரசின் சார்பில், திருச்செங்கோடு நகரில் "கண்ணகி கோட்டம்" ஒன்று அமைக்கப்படும் என்பதை, பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் "கண்ணகி கோட்டம்" அமைப்பதற்கான, ஆயத்த நட வடிக்கைகள் அனைத்தையும், தமிழக அரசு வெகு விரைவில் மேற்கொள்ளும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா, வெகு விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டு, சீரோடும், சிறப்போடும் நடந்தேறிக் கொண் டிருக்கிறது. திருச்செங்கோடு நகரத்தின் வரலாற்றில், தனக்கென ஒரு தனியிடத்தைத் தேடிப் பிடிக்கும் இந்த விழாவை, இத்தனைச் சிறப்புகளோடு ஏற்பாடு செய்த, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு டி.எம். செல்வகணபதி அவர்களுக்கும் அவருடன் இணைந்து பணி யாற்றிய, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலு வலர்கள், காவல்துறை அலு வலர்கள் ஆகியோருக்கும் என் நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை யும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, 54,000 க்கும் மேற் பட்ட, என் பேரன்பிற்குரிய மக்கள் ஒவ்வொருவருக்கும், நானே எனது கரங்களால் வழங்க வேண்டும், என்று மனதார விரும் பினாலும் நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சிலருக்கு மட்டும், இந்த விழா மேடையில் வழங்க உள்ளேன். நான் உதவிகளை மேடையில் வழங்குகின்ற அதே நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், மற்ற பயனாளிகளுக்கு, அவரவர் அமர்ந்திருக்கின்ற இடத்திற்கே சென்று, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள்.

இந்த நலத்திட்ட உதவிகளை, நானே உங்கள் வீடு தேடி, உங்களுக்கு வந்து கொடுத்ததாகக் கருதி, இந்த உதவிகளை, ஒரு அடிப்படையாக வைத்துக் கொண்டு, உங்களது வாழ்க்கை



முன்னேற்றத்திற்கு, ஒரு புதிய பாதையை, நீங்கள் வகுத்துக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக் கொள்வதோடு நீங்கள் ஈடுபடுகின்ற அத்தனை முயற்சி களிலும், வெற்றிகண்டு வாழ்க்கை யில் மேம்பாட்டையும், பொருளா தார முன்னேற்றத்தையும் அடைய வேண்டும் என்று எனது நெஞ் சத்து நல்வாழ்த்துக்களை உரித் தாக்கிக் கொள்கிறேன்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து, என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சி னைக் கேட்பதற்காகவும், பெருந் திரளாக இங்கு வந்து, தங்களது நெஞ்சங்களில் தேக்கி வைத்துள்ள, அளவிட முடியாத அன்பையும், பாசத்தையும் பொழிந்த, சேலம் மாவட்ட மக்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியையும், அன் பினையும் தெரிவித்துக் கொள் வதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒவ்வொரு முறையும், உங்களது இதய பூர்வமான வரவேற்பையும், அன்பையும், ஆதரவையும் காணும்போது, எனது மனம் நெகிழ்ச்சி அடைகின்றது. என் மீது நீங்கள் வைத்திருக்கின்ற, அளவிட முடியாத நம்பிக்கையை, மேலும் உறுதிப்படுத்துகின்ற வண்ணம், எங்கள் செயல்பாடு அமையும் என்பதை எடுத்துரைத்து சேலம் மாவட்டத்து மக்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

## Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# பர்கூர் தொகுதி மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

பின் தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அந்தத் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களைய வேண்டும் என்பதற்காக, பர்கூர் நகரின் தொகுதி அலுவலகம் ஒன்றைத் துவக்கி மனுக்களைப் பெற்று வருகிறார்.

அந்த அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தனது நேரடிப் பார்வையில் பரிசீலனை செய்து, அரசுத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்களைப் பல்வேறு அரசுத் துறையின் பிரிவுகளுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைத்து, அரசின் சார்பிலான உதவிகளைப் பெற்றுத் தருகிறார்கள். எஞ்சியுள்ள மனுக்களில், அரசு உதவிகள் கிடைக்க இயலாத வண்ணம் உள்ள மனுக்களைத் தெரிந்தெடுத்து, அந்த மனுதாரர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சொந்த நிதியிலிருந்து பொருட்களை வாங்கியும், நிதியாக வழங்கியும் வருகின்றார். இதுவரை 892 நபர்களுக்கு இத்தகைய உதவிகள் பொருட்களாகவும், நிதி உதவியாகவும் வழங்கப்பட்டுள்ளன.

4.7.1994 அன்று மேலும் 196 நபர்களைத் தனது இல்லத்திற்கு வரவழைத்து, தனது சொந்தச் செலவிலிருந்து, பொது நிதி உதவி கோரிய 29 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க உதவி கோரிய 20 நபர்களுக்கும், காய்கறிக் கடை வைக்க நிதி உதவி கோரிய 14 நபர்களுக்கும், ஆடுகள் வாங்க நிதி உதவி கோரிய 6 நபர்களுக்கும், மளிகைக் கடை வைக்க நிதி உதவி கோரிய 10 நபர்களுக்கும் நிதி உதவியினை வழங்கினார்.

மேலும், வீடு கட்ட நிதி உதவி கோரிய 5 நபர்களுக்கும், திருமணம் செய்வதற்காக நிதி உதவி கோரிய 6 நபர்களுக்கும், மருத்துவச் சிகிச்சைக்காக நிதி உதவி கோரிய 15 நபர்களுக்கும் நிதி உதவியினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் வழங்கினார்.

இவை மட்டுமின்றி, கறவை மாடு கோரிய 10 நபர்களுக்குக் கன்றுடன் கூடிய உயர்ந்த ரகக் கறவை மாடுகள் தலா ஒவ்வொன்றும், மாட்டு வண்டி கோரிய 5 நபர்களுக்கு, உயர்ந்த ரகக் காளை மாடுகளுடன் கூடிய இரட்டை மாட்டு டயர் வண்டி தலா ஒவ்வொன்றும், தையல் இயந்திரம்







கோரிய 12 நபர்களுக்குத் தலா ஒரு தையல் இயந்திரமும், சலவைப் பெட்டி கோரிய 10 நபர்களுக்குத் தலா ஒரு சலவைப் பெட்டியும், உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மூன்று சக்கர வண்டியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மேலும், டீக்கடை வைக்க நிதி உதவி கோரிய 7 நபர்களுக்கும், துணி வியாபாரம் செய்ய நிதி உதவி கோரிய 7 நபர்களுக்கும், சுய தொழில் செய்ய நிதி உதவி கோரிய 3 நபர்களுக்கும், டயர் வல்கனைசிங் கடை வைக்க நிதி உதவி கோரிய ஒரு நபருக்கும், சவுண்டு சர்வீஸ் கடை வைக்க நிதி உதவி கோரிய 2 நபர்களுக்கும், மிட்டாய்க் கடை வைக்க நிதி உதவி கோரிய ஒரு நபருக்கும், புத்தகப் பைண்டிங் கடை வைக்க நிதி உதவி கோரிய ஒரு நபருக்கும், கல்வியைத் தொடர நிதி உதவி கோரிய 2 நபர்களுக்கும், சலூன் கடை வைக்க நிதி உதவி கோரிய 3 நபர்களுக்கும், நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

அரிசி கடை வைக்க, வளையல் கடை வைக்க, எலக்டிரிகல்ஸ் கடை வைக்க நிதி உதவி, தச்சு வேலை செய்ய, இரும்புக் கடை வைக்க, மிதியணி கடை வைக்க நிதி உதவி கோரிய ஒவ்வொருவருக்கும் நிதி உதவியினை வழங்கியும், 10 நபர்களுக்கு சைக்கிள் கடை வைக்கத் தலா 6 சைக்கிள்களும், உடன் கடை வைக்கத் தேவையான இதர உபகரணங் களையும், கட்சிப் பணி செய்ய சைக்கிள் கேட்ட ஒரு நபருக்கு சைக்கிளும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மேலும், பார்வையற்ற 3 நபர்களுக்கு நிதி உதவியும், உடல் ஊனமுற்ற 6 நபர்களுக்கு நிதி உதவியினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.




**'பண்பாளர் பட்டுக்கோட்டையார்'**

**ஆசிரியர்: கலைமாமணி தில்ரூபா சண்முகம்**

**வெளியீடு: தில்ரூபா பதிப்பகம்**
**20, முதல் தெரு,**
**புலியூர் 11வது தெரு,**
**டிரஸ்ட்புரம்,**
**சென்னை600 024**

**பக்கம்144 விலை ரூ.20**

தமிழ்த் திரைப்பட உலகில் கொடிகட்டிப் பறந்த கவிஞர்களில் குறிப்படத்தக்கவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். அவரது பாடல் தொகுப்புகள் சில வெளிவந்துவிட்டன. ஆனால், இந்நூல் அந்த ரகம் அல்ல கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்த ரத்தின் பண்பு நலனை விரித்துரைப்பது.

பலபேரிடம் கேட்டெழுதியது அல்ல பல்லாண்டுக்காலம் கவிஞரோடு பழகியறிந்த இசைப்புலமை மிக்க நூலாசிரியரால் எழுதப்பட்ட பெருமைமிக்கது. "நான் முதன்முதல் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை 1951 அக்டோபர் 13இல் சந்தித்தேன் அதிலிருந்து இன்பத்திலும், துன்பத்திலும் நெருங்கிப் பழகி வந்தவர்கள் நாங்கள். கடைசியாக அவரை 1959 அக்டோபர் 7இல் சந்தித்தேன். அதற்கு மறுநாள் அவர் மறையாப் புகழை நிலை நிறுத்தி மாண்டுபோனார்..." என்றெல்லாம் சம்பவங்களைத் தேதி ஆண்டு வாரியாகக் குறிப்பிட்டு எழுதியுள்ளார் ஆசிரியர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு ஏற்பட்ட தொடர்பை விளக்குவது உட்பட கவிஞர் பட்டுக்கோட்டையாரைப் பற்றி 15 தலைப்புகளிலான தனித்தனிக் கட்டுரைகள் மட்டுமல்ல 'அண்ணே, இதுக்குமேல ஓடலே' என்று பாதியில் நிறுத்தப்பட்ட அவர் பாடல்களும் இதுவரை வெளிவராத அவர் எழுத்தோவியங்களும் கூட இதில் வகையுறச் சேர்க்கப்பட்டுள்ளன.

கலையுலகினர் கவிஞர்கள் மட்டுமல்ல, அவர்பால் பற்றுக்கொண்ட ரசிகர் பெருமக்களும் அவசியம் படிக்கவேண்டிய நூல் இது.

**'சுங்கைகொண்டான்'**

**'உங்கள் மனமும் உங்கள் முன்னேற்றமும்'**

**ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு**

**வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்**
**த.பெ. எண் 1447**
**4, தணிகாசலம் சாலை**
**தியாகராயநகர்**
**சென்னை600 017**

**பக்கம்128 விலை ரூ.17.50**

நன்மையும் தீமையும் பிறர் தர நமக்கு வருவதில்லை, என்பதை வலியுறுத்திச் சொல்லும் நூல். மனம் அதன் செயல்பாடுகள், முன்னேற்றம், தாழ்வு என்று மனம் சம்பந்தப்பட்ட அத்தனை விஷயங்களும் அலசி ஆராயப்பட்டிருக்கிறது. வாழ்வில் முன்னேற, மன அமைதி பெற இந்நூல் நல்ல குரு.

**'உதவித் திருமணம்'**

**ஆசிரியர்: மலையமான்**

**வெளியீடு: அன்புப் பதிப்பகம்**
**63A, ரங்காச்சாரி சாலை**
**சென்னை18**

**பக்கம்160 விலை ரூ.21**

சிறு சிறு நாடகங்கள் நகைச்சுவையோடு எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு செய்தியைச் சொல்லுகின்றன.

மாணவ மாணவியர் மட்டுமன்றி, அனைவரும் படித்து ரசிக்கத்தக்க நாடகங்கள் இவை.



'தமிழரசு' அச்சகத்தில், தேர்வு நிலை பிளானடா ஆப்செட் டெக்னிஷியனாகப் பணிபுரிந்த திரு ஆர்.அண்ணாமலை அவர்கள் 2.6.94 அன்று இயற்கை எய்தினார். அவரது குடும்பத்தாருக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங் கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**- ஆசிரியர்**

**'அன்புள்ள மகனுக்கு'**

**ஆசிரியர்: டி.என். சுகிசுப்பிரமணியன்**

**வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்**
**15, முத்துப்பிள்ளைத் தெரு**
**வ.உ.சி. நகர் வேலூர்-1**

**பக்கம்13 விலை ரூ.104**

தந்தை மகனுக்குக் கடிதவாயிலாக அறிவுரை கூறுவதாக அமைந்த நூல். ஒவ்வொரு கடிதத்திலும் ஒரு பொருள் கையாளப்பட்டிருக்கிறது.

கடிதத்தின் பயன், திடமானது, அன்பு, விநயம், மொழி, கல்வி, பிறரிடம் பழகும் முறை, கவனம் என்று இளைஞர்கள் என்றும் நினைவில் கொண்டு கடைப்பிடித்து முன்னேற அற்புதமான அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. இளைஞர்களுக்கு மிகவும் பயனுள்ள நூல்.

**'ஊருக்குத் தெரியாத உறவு'**

**ஆசிரியர்: நெல்லை செல்வம்**

**வெளியீடு: செல்லப் பாப்பா பதிப்பகம்**
**6, கஸ்தூரிபாய் நகர்**
**4வது தெரு, அனகாபுத்தூர்,**
**சென்னை600 070**

இது ராணுவ வீரர் ஒருவரின் கதை. தாய் நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று ஆகியவை வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

ராணுவ வீரனின் மனிதாபிமானம், கடமையுணர்வு நினைவில் நிற்பவை.

**'தூண்டிலில் சிக்காத மீன்கள்'**

**ஆசிரியர்: மன்னார்குடி விஸ்வநாதன்**

**வெளியீடு: மோகனா பதிப்பகம்**
**9ஏ, பதின்மூன்றாவது தெரு**
**மன்னார்குடி614 001**

**பக்கம்204 விலை ரூ.25**

கதை தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகிறது. எனவே, இக்கதையின் பாத்திரங்களோடு தஞ்சை மாவட்டத்தையே சுற்றுகிறோம். கதை முடியும் வரை தஞ்சை மாவட்டத்திலேயே இருக்கும் உணர்வு. மண்வாசனையுடன் கூடிய நல்ல கதை.

**என்.கே. சாமி**

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

## உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.


**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**


| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**


*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

## சேலம் மாவட்டத்தில்...



தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



